www.padippakam.com


# திசை

திசை 1 | 6-10-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 39


### மீண்டும் ஓட்டம்

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கைக்கு — அமெரிக்கா, ரஷ்யா உதவி

மகாவலி அபிவிருத்தித் திட்டங்களை மேலும் தொடரும் பொருட்டு இலங்கைக்கு அமெரிக்கா 230 மில்லியன் ரூபா கடனுதவி வழங்கியுள்ளது.

இதே வேளை சோவியத் யூனியனும் இலங்கையும் பலவித கூட்டு வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக உடன்படிக்கைக்கு வந்துள்ளன. அவற்றுள் முக்கியமாக சோவியத் இழுவைக் கப்பல்களை இலங்கையில் பழுது பார்த்தல், இலங்கையில் தைத்த ஆடைகளைக் கொள்வனவு செய்தல் போன்றவை அடங்கும்.

# வடக்கு கிழக்கு மாகாணசபை கலைப்பு — புதிய தேர்தல்?

**விடுதலைப் புலிகள் ஜனநாயக வழிக்குத் திரும்பத் தயாரானால் தாம் வட - கிழக்கு மாகாண அரசைக் கலைத்துத் தேர்தலுக்கு நிற்கத் தயாராய் இருப்பதாய் வட - கிழக்கு மாகாண அரசின் முதல்வர் அறிவித்திருந்தது, தெரிந்ததே. இவ்வறிவித்தலை எதிர்கொண்டு பதிலளிப்பதுபோல் விடுதலைப் புலிகளின் அறிக்கை அமைந்துள்ளது. அதாவது வட - கிழக்கு மாகாண அரசு கலைக்கப்படும் பட்சத்தில் தாம் தேர்தலுக்கு நிற்கத் தயார் என, அவர்கள் அறிவித்துள்ளனர்.**

இவ்விருதரப்பினரதும் அறிவித்தல், வட — கிழக்குப் பகுதியின் இது காலவரை ஓடி வந்த அரசியல் ஓட்டத்தில் புதிய ஊற்றுக் கண்ணைத் திறந்துள்ளதாகவே அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது. அதாவது இவ்விரு பகுதியினரும் ஆயுத ரீதியில் மோதிக்கொள்ளாது, பரஸ்பரம் ஜனநாயக வழிக்குத் திரும்பும் ஒரே முடிவுக்கு வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே.

ஆயினும், இதற்கெதிரான சந்தேகங்களும் அரசியல் வட்டாரங்களில் எழுப்பப்பட்டே உள்ளன. இந்தியப் படையினர் வட — கிழக்கு இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பது பற்றி இலங்கை அரசு குற்றஞ்சாட்டியிருப்பதும், அதேவேளை விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மீறுவதாக ஈ பி ஆர் எல்.எவ் குற்றஞ்சாட்டித் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருப்பதும் ஆயுதக் கெடுபிடிகளின் அச்சுறுத்தலையே இன்னும் காட்டி நிற்கின்றன.

இந்திய அமைதிப்படை வெளியேறும் பட்சத்தில் வட — கிழக்கு பகுதி வாழ் மக்களுக்கு பாதுகாப்புத்தேவையே. ஆனால் இந்தத் தேவை என்ன ரீதியில் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்கும் ஜனநாயக வழிக்குத் திரும்புதல் மூலமே சிறந்த முறையில் சாத்தியப் படுத்தலாம் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

## அரசும் ஜே. வி. பியும்

ஜே. வி. பி. யினருக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அரசு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்த போதிலும் ஜே. வி. பி.யினர் அதனை மீறி 50 பேரை கொன்றுள்ளதாகவும், பல கட்டிடங்களுக்குத் தீ வைத்துள்ளதாகவும், 7 பஸ்களை தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது;

தீ மூட்டும் தொழில் ஜே.வி.பி. யினருக்கு ஒரு தனிக்கலையோ ? 1972ஆம் ஆண்டுக்கும் 1987ஆம் ஆண்டுக்கும் இடையில் வடக்கு கிழக்குப் பகுதியில் தீயிடப்பட்ட மொத்த பஸ்களின் எண்ணிக்கை 212 ஆகும். ஆனால் 1987 யூலை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதை எதிர்த்து தென்பகுதியில் நிகழ்ந்த மூன்று நாள் வன்செயல்களில் மட்டும் தீமூட்டி எரிக்கப்பட்ட பஸ்களின் எண்ணிக்கை 213 ஆகும்.

சரணடையும் ஒவ்வொரு ஜே. வி. பி.யினருக்கும் பொது மன்னிப்புடன் தலா 50,000 ரூபா உதவிப் பணமாகத் தரலாமென அரசு அறிவித்ததைத் தொடர்ந்து 130 பேர் சரணடைந்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

அரசின் யுத்த நிறுத்தத்திற்கு ஜே. வி. பி. யினர் மதிப்பளிக்காததனால் ஜே. வி. பி. யினர் மீது செவ்வாய்க்கிழமை காலையிலிருந்து மீண்டும் இராணுவ நடவடிக்கைகளை எடுக்குமாறு, முப்படையினருக்கும், பொலிஸாருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக அரசின் குறிப்பொன்று கூறுகின்றது.

## திருமதி திரணகம மரணம் தொடர்பாக எதிர்ப்பு ஊர்வலம்

யாழ். மருத்துவ பீட உடற்கூற்றியல் துறைத் தலைவர் திருமதி ராஜினி திரணகம செப்ரெம்பர் 21ஆம் திகதி மாலை, மருத்துவபீடத்தில் இருந்து வீடு திரும்பும் வழியில் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. இதற்குத் தமது எதிர்ப்பைக் காட்டும் முகமாக ஒக்ரோபர் 1ஆம்திகதி திங்கட்கிழமையன்று, யாழ். பல்கலைக்கழக மாணவர், ஊழியர், ஆசிரியர் திருநெல்வேலியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கும், நல்லூருக்கும் ஊர்வலமாகச் சென்றார்கள். இந்த மாபெரும் ஊர்வலத்துக்கு யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி துரைராசா அவர்களும், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஆர். பாலகிருஷ்ணன் அவர்களும் தலைமை தாங்கினார்கள்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கிய வண்ணம், கறுப்புத் துணியால் தமது வாய்களைக் கட்டியவாறு பல்கலைக்கழக மாணவ - மாணவிகள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

### ஈடு செய்ய முடியாத இழப்பு

திருமதி ராஜினியின் கொலைக்கு எதிர்ப்புக்காட்டும் முகமாக நடந்த ஊர்வலத்தைத் தொடர்ந்து பி. ப. 2 மணியளவில் கைலாசபதி அரங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு புதிய கொடி

வட - கிழக்கு மாகாண சபைக்கான புதிய கொடியினை, முதல்வர் அ. வரதராஜப்பெருமாள் ஒக்ரோபர் இரண்டாம் திகதி திங்கட்கிழமை, திருகோணமலையில் வைபவரீதியாக ஏற்றிவைத்தார்.

யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் ஆ. முருகநேசன் மாகாணசபைக் கொடியை ஏற்றிவைத்தார். யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்கத் திணைக்களங்களிலும் சமகாலத்தில் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன.

மூவர்ணத்தில் அமைந்திருக்கும் இக் கொடியில் சிவப்புதியாகத்தையும், பச்சை பசுமைப் புரட்சியையும், வெள்ளை சமாதானத்தையும் உணர்த்துகிறது. நடுவிலமைந்திருக்கும் செம்மஞ்சள் சூரியன், மனித வலுவைக் குறிக்கிறது.

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### முதலாளி நிலையங்கள்!

இன்றைய இலங்கை அரசின் நோக்கம், சில தனிப்பட்ட பணம் படைத்தவர்களைப் பெரும் முதலாளிகளாக்குவதா? இந்த அரசின் நோக்கிற்கு ஜே.வி.பி யினரின் நடத்தைகள் அனுசரனையாக இருப்பதே இன்னும்வேடிக்கை. ஜே.வி.பி யினர் இக் குறுகிய காலத்துக்குள் 138 தபால் - உபதபால் நிலையங்களை எரித்துள்ளனர். இந்த எரிப்பு வேலையால் அரசாங்கத்தின் ஆதரவிலியங்கும் தனிப்பட்ட முதலாளிகளின் முகவர் தபால் நிலையங்கள் முதன்மை அடைந்துள்ளன. கூடவே அரசாங்க தபால் நிலையங்களில் கிடைக்காத குறிப்பிட்ட இனப்பெறுமதியுள்ள முத்திரைகள், உள்ளூர், வெளியூர்த் தொலைத் தொடர்பு வசதிகள் யாவும் இங்கே கிடைக்கின்றன.

### தனக்குத் தனக்கு வரும் போதே....

முன்னர் வட - கிழக்குப் பகுதிகளில் சிங்கள ராணுவத் தாக்குதல்களின்போது, பொது மக்களே அதிகமாகக் கொல்லப்பட்டனர் என்று தமிழ்ப் பகுதி மக்கள் முறையிட்ட போது, அதை நம்பாத சிங்கள மக்கள் தற்போது, அங்கு ராணுவத் தாக்குதல்களுக்கு இலக்காகி ஏராளமான சிங்கள அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதைக் கண்ட பின்னரே அதை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

### மூச் !

முன்னர் யு. என். பி ஆட்சிக்கு வந்த காலத்தில் அநேக சிங்கள மக்கள் தாமும் யு.என். பி. பிரமுகர்கள் என்பதைக் காட்டிக் கொள்வதற்குப் பிரயத்தனம் எடுத்தனர். இப்போ நிலைமை தலைகீழாக மாறியுள்ளன. எவரும் தாம் ஆளுங்கட்சியினர் என்று வாய்திறக்கவே பயப்படுகின்றனராம்.

### ''பதுல''

'பதுல' (Padula) என்ற தலைப்பில் சிங்களக் கையெழுத்துப் பிரதி வெளிவருகிறது. அதன் தமிழ்க் கருத்து 'அடித்தளம்' என்பதாகும். இப்பத்திரிகை ஜே.வி.பி யைக் கண்டிப்பதோடு, சில நியாயமான கருத்துக்களை முன்வைத்து வெளிவருகிறது.

### இலங்கையுள் லெபனான் !

லெபனானில் மீண்டும் கடும் யுத்தம் தொடங்கியிருப்பதால் லெபனானில் வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்ற 500 க்கு மேற்பட்ட இலங்கையர் இதற்குள் சிக்கி, படுகாயமுற்று, கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டுள்ளனராம். இங்கே இவர்களை இவர்களின் உறவினர் சென்று பார்க்கவோ இவர்கள் பற்றிய செய்தியை வெளியிடவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம். இதனால் லெபனானில் தமது உறவினர்களை உடையவர்கள் ஓர் அந்தரநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளார்களாம்.

'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

படிப்பகம்

www.padippakam.com



# மண் குதிரையில் ஆறு கடக்க முயலுதல்!

**தி**ங்கள் 1 9-89 'திசை' இதழில் வெளிவந்த "இந்து மதமும் தீண்டாமையும்" என்ற கட்டுரை குறித்து.


திசை THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 225/-
அரைவருடம்–ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

Persons living abroad who are desirous of subscribing to the "THISAI" are kindly invited to place their subscriptions with the Circulation Manager, New Era Publications Ltd., 118, 4th Cross Street, Jaffna, Sri Lanka and not with any distributor or Agent.

Governing Councillor
New Era Publications Ltd.


இன்றைய சமூக சூழ்நிலை, மனிதாபிமானம் போன்ற அடிப்படைகளில் தீண்டாமை அவசியமற்றது என விவாதிப்பது விரும்பத்தக்கது.

சமூக மானிடவியல், சமூகவியல் போன்ற சமூகவிஞ்ஞானங்கள் பௌதிக விஞ்ஞானங்களைப்போல அறுதியிட்டுக் கூறவல்ல முடிவுகளைத் தருவனவல்ல. மேலும் அவை மேனாட்டவர்களது சமூக சூழ்நிலையை அதானித்துக், குறித்த சில மாதிரிகளைக் கட்டமைத்து ஆக்கப்பட்டவை. அவற்றை அப்படியே கீழ்நாட்டுச் சமூகங்களை அவதானித்துப் பிரயோகிக்கும்போது பிழைகள், மாறுபாடுகள் தோன்றுமென்பது அத்துறைகளை அறிந்தோரின் கருத்து. அத்துறையினருள்ளும் மார்க்ஸீய சமூகவியலாளருக்கும், மற்றையோருக்குமிடையில் சமூகப் பகுப்பாய்வு, பயனுரைத்தல் போன்றவற்றில் பாரதூரமான வேறுபாடுகள் உள. எனவே அத்துறைகளை அசைக்க முடியாத உண்மை முடிவுகளைக் காட்டவல்லவை என நம்பி, வேதகால வாழ்க்கையைப் பகுப்பாய்வு செய்ய முற்படுவது மண்குதிரையை நம்பி ஆறுகடக்க முற்பட்ட கதையாகும். (காலஞ்சென்ற பேராசிரியர் கைலாசபதியவர்கள் திருக்குறள்பற்றி வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்த்திய விரிவுரையில் இந்த அடிப்படையில் கருத்துகள் வெளியிட்டமை பற்றிப் பேச்சு நிகழ்ந்தபோது, "இது ஒரு நோக்குமட்டுமே"(This is only one point of view) எனப் பணிவுடன் விடையிறுத்தமை நினைவுக்கு வருகிறது.

ராகுல்சாங்கிருத்தியாயனும், கோசாம்பியும் செய்த முயற்சிகள் இந்திய மண்ணில் தளைக்கவில்லை. இங்குதான் அவை வேர்விடுகின்றன போலும். ஆனந்தகுமாரசுவாமி கூறியதுபோல "இந்து மதத்தின் புராதன, நவீன நூல்களும், செயல்முறைகளும், ஐரோப்பிய நிபுணர்களால் ஒரு நூற்றாண்டுகாலம் ஆராயப்பட்டன எனினும், இந்து மதம்பற்றிய நம்பிக்கை மிகுந்த விளக்கம் கொடுப்பதாயின், இதுவரை ஐரோப்பிய அறிஞராலும், நவீன அவநம்பிக்கையைத் தூண்டுவனவும் பரிணாம ரீதியானவையுமான சிந்தனைப் போக்கில் பயின்ற இந்திய அறிஞராலும் முன்வைக்கப்பட்ட கருத்துகளில் பெரும்பாலானவற்றைப் பூரணமாக மறுத்துரைக்கும் வடிவத்தில் மட்டுமே கொடுக்கப்படவேண்டும் எனக்கூறுவது மிகையுரையாகாது."

வேதவிளக்கம் (Vedic exegesis)பற்றிய அவரது இரு நூல்கள், அரவிந்தரும் அவரது மரபுவழி வேதவியாக்கியானம் செய்யும் கபாலிசாஸ்திரி போன்றவர்களின் நூல்கள், தயானந்தர் வழி வியாக்கியானங்கள் பற்றி எமது பல்கலைக்கழகங்களில் பயின்றோர் அறியார்கள்போலும். நவீன இந்திய வேதவியாக்கியானங்களில் தயானந்தரின் வடநெறியும் (Northern School), அரவிந்தரின் புதுச்சேரி நெறியுமே (Pondicherry School) கணிப்புக்குரியன என பிரபுத்த பாரதா சஞ்சிகையில், அறுபதுகளில் ஒரு நூல் விமர்சகர் எழுதியதுண்டு.

தைத்திரீயப் பிராஹ்மணத்தின் சுநஹ்சேபன் கதையில் புருஷமேதயாகத்தில் தன்னை வெட்டப் போகிறார்கள் எனச் சிறுவன் அழுவதில்; குறியிட்டு ரீதியில் பலிகொடுப்பதாகப் பாவனைசெய்து காட்டில் ஆறுமாதம் தனித்துவாழ விடப் போகிறார்களே என்பதற்காகவே அழுதான் என்பதையறியாது, சென்ற நூற்றாண்டு ஐரோப்பிய அறிஞர்கள் எழுதிய கூற்றை இன்னும் ஒப்புக்கொண்டு எழுவது, "தேவதூதர்கள் கால்மிதிக்க அஞ்சும் இடத்தில் மூடர்கள் துணிந்து குதிக்கும்" கதைதான். நான் மாணவனுய் "வான்மன் சம்ஸ்கிருத வாசகம்" படித்தபோதே எமது மதிப்பிற்குரிய ஆசிரியப்பிரான் ஸ்ரீதராம சாஸ்திரியார் தர்பங்கா சமஸ்கிருத பல்கலைக்கழக மீமாம்சா விரிவுரையாளர் (தென்னகத் தமிழர்) புருஷமேதம் பற்றி எழுதிய கட்டுரையை கல்கத்தா வடமொழி சஞ்சிகையிலிருந்து படித்துக் காட்டியதும், அது பற்றிப் பத்திரிகைகளில் எழுதியதும் நினைவுக்கு வருகின்றன.

மருத்துவத்துறையிலோ பிற விஞ்ஞானத் துறைகளிலோ பழைய பதிப்புகளில் கண்டவற்றை நம்பி மாணவர்கள் விடையெழுதினால் விஞ்ஞான உலகம் சிரிக்காதா? மிக அண்மைக்காலப் பதிப்புகளை நாடுவார்களே.

இந்துநாகரிகத் துறையினர் இன்றும் வின்ரர்னிற்ஸையும், மக்டொனலையும், கீத்தையும் நம்பித் தம் விரிவுரைகளை நடத்தினால் விளைவு என்னவாகும்?

சபா
ஊர்காவற்றுறை.



## சிந்தனையைத் தூண்டுகின்றது

மிகவும் பின்தங்கிய கிராமத்தில் பணியாற்றுவதனால் திசையைத் தொடர்ந்து படிக்க முடியாவிட்டாலும் கூட, படிக்கும்போதெல்லாம் மன நிறைவு ஏற்படுகிறது. நன்றாகவே எழுதுகிறார்கள். பல வகை அம்சங்களும், மிக்க சிந்தனையைத் தூண்டுகின்றன.

Dr. ச. முருகானந்தன்
வன்னேரிக்குளம்.

## அறிவுக் களஞ்சியம்

என் போன்ற வளரும் மாணவர்கள் படித்துப் பயன்பெற, இன்று தமிழில் வெளிவரும் அறிவுக் களஞ்சியம் 'திசை' என்பது நாடறிந்த உண்மை. கலை, இலக்கியம், வெளிநாட்டு – உள்நாட்டு அரசியல் போன்றவற்றில் தெளிவையும் பற்றுதலையும் எனக்கு ஏற்படுத்தியது 'திசை'யே.

அறிவியல் உலகம், உருளும் உலகில் என்பன என்போன்றோர்க்கு மிகவும் பிரயோசனமாக உள்ளன. இவ் அறிவியல் உலகில் கணிதம், விஞ்ஞானம் சம்பந்தமான கருவூலங்களைத் தந்து, என் போன்ற பல மாணவர்களது அறிவு விருத்திக்கு உறுதுணையாக இருக்க 'திசை'யை மிகவும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

வே. கணேசதாஸ்
விக்னேஸ்வராக் கல்லூரி,
கரவெட்டி.

## ஏ. டி. கடையில் ஜனசக்தி உணவுப் பொருட்கள்

ஜனசக்தித் திட்டத்தின் கீழ் ஒக்ரோபர் 2ஆம் திகதி திங்கட்கிழமை உத்தரவு பெற்ற வர்த்தகர் திரு. என். செல்வரத்தினம் கடையிலும் யாழ்.கிளை 27இலும் பொருட்கள் வழங்கப்பட்டன. கச்சேரியடியில் உள்ள மேற்படி கடையில் உத்தரவுபெற்ற வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. செல்லத்துரை தலைமையில் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது.

சங்கத்தின் செயலாளர் பேசுகையில், ஜனசக்தித் திட்டத்தில் உத்தரவுபெற்ற வர்த்தகர்களையும் சேவை செய்வதற்காக அனுமதித்ததற்கு யாழ். உதவி அரசாங்க அதிபருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொண்டார்.

இக் கருத்தரங்கில் யாழ். உதவி அரசாங்க அதிபர், யாழ். தபால் திணைக்கள அத்தியட்சகர், யாழ். பலநோக்குக் கூ. ச. தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர் பயிற்சி நெறி

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அறவழிப் போராட்டக் குழு, ஒக்ரோபர் மாதத்தில் ஓர் எழுத்தாளர் பயிற்சி நெறியை நடாத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறி மூன்று தினங்களுக்கு நடைபெறும். நெறியில் பங்கு கொள்ள விரும்புவோர் செயலாளர், அறவழிப் போராட்டக்குழு, த. பெ. இல. 2, சாவகச்சேரி எனும் முகவரிக்குத், தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

## எதிர்வு ஈடு

ஆக்கல்,காத்தல்,அழித்தல் — மூன்று தொழில்களுமே முக்கியமானவைதான், தொழிற் பிரிவினையின் அடிப்படையில் இதற்கென்று மும்மூர்த்திகளே இருக்கிறார்கள். இருந்தாலும், சிருஷ்டிக் கடவுளான பிரம்மாவின் பிரதிநிதிகள் சிலர் பூவுலகிலும் வாழ்கிறார்கள்; பிரம்மா இவர்களை மகப்பேற்று நிபுணர்களாகவே படைத்து விட்டார். மகப்பேற்று நிபுணர்களுக்குளப்படி, என்ன இந்த முக்கியத்துவம்? ஒரு ஜீவனுடைய வாழ்க்கையை பிள்ளையார் சுழிபோட்டு மண்ணுலகில் ஆரம்பித்து வைக்கும் தொழிலைச் செய்பவர்கள் இவர்கள் தான். இவர்களில் சிலரைப் பற்றிச் சாற்று கவி (புகழ்ந்து) பாடலாம்.

நினைவுப் பூங்காவில் வாடாமல், கருகாமல் இருக்கக்கூடிய கதை இது ... உடல் வருத்தம் பாராது, பசிநோக்காது அலையும் மகப்பேற்று நிபுணர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார். பரிசுத்தர்; தூய்மையின் சின்னம். கழுத்தில் சுருக்குப் போட்டது மாதிரி ஒரு ஸ்தெதஸ்கோப். எறிக்கும் வெயில் வேளைகளிலும் தனியார் மருத்துவ மனைகளை வலம் வரத்தவறமாட்டார். மாலை ஆறுமணிக்கெல்லாம் நகரம் வெறிச்சோடிக் கிடக்கும். இவரது 'சேவை' தொடரும். எதற்கும் காலம், நேரம் வேண்டாமா, என்ன? பரிசோதனைகள் முடிந்த பிறகு ஜே. ஜே என்று காரில்போய் விடுவார்.

நாம் விரும்பும் மருத்துவ சேவையையும், கல்வியையும் பணக்காரர் பணம்கொடுத்து வாங்கும் காலம் இது. பணத்தைக்கொண்டு தேரும் விடலாம்; குதிரையும் ஓடலாம். கர்ப்பிணி ஒருத்தி பத்து மாதங்களில் எட்டுத் தடவைகள் இந்த மகப்பேற்று நிபுணரைக் கலந்தாலோசித்து மருந்துகளையும் பெற்றிருக்கிறாள். இந்த டொக்ரரின் கட்டளைப்படி, டொக்ரர் குறித்த திகதியில் கர்ப்பிணி வார்ட்டில் அனுமதி பெறவில்லை. இரண்டொரு நாள் தாமதித்து கர்ப்பிணியை மகப்பேற்று அறைக்கு (Labour Room) தாதிகள் பக்குவமாகக் கொண்டு சென்றுள்ளனர். கர்ப்பிணிக்கோ தாங்கமுடியாத பிரசவவேதனை. மகப்பேற்று நிபுணர் சீறிவிழுந்து, சிணுங்கிக்கொண்டு, கையிலிருந்த கருவியையும் ஓங்கியுள்ளார். தாதிகள் கர்ப்பிணியைத் தேற்றியுள்ளார்கள். 'புளோரன்ஸ் நைட்டிங்கேலின்' அடிச்சுவடுகளுக்கு உள்ள இயல்பு. எப்படியாயினும் அவர்களும் அவளைப்போல பெண்கள்தானே!

வீடு தேடிப்போய், மாஞ்சோலைச் சேலைபோன்ற அவர் வீட்டு முற்றத்தில் வைத்து, அவர் 'கையில் வைக்க' வில்லை என்றுதான் இந்தக் கோலமோ? என்னவோ, ஏதோ? □

நக்கீரன்

www.padippakam.com




# ஒரே நேர்கோட்டில் ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின்

ஹிட்லரின் ஆட்சிக்காலம், ஜேர்மனியில் யூதர்கள் கூட்டங் கூட்டமாகப் பிடிக்கப்பட்டு, லொறிகள், ட்ரக்குகளில் ஏற்றிச் செல்லப்படுகிறார்கள். எங்கு கொண்டு செல்லப் படுகிறோம் என்பது ஆரம்பத்தில் அவர்களுக்குத் தெரியாது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அறிஞர்கள், கலைஞர்கள் எவரென்றும் பேதம் இல்லை. லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டு குகைகளில் அடைக்கப்படுகிறார்கள். நச்சுவாயு செலுத்தப்பட்டு சாகடிக்கப்படுகிறார்கள். இப்படித் தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் கூட்டு மொத்தமாகக் கொலை செய்யப்பட்டவர்களினதும் எண்ணிக்கை இலட்சக் கணக்கிலாகும். ஹிட்லரின் கொலை வெறித் தளபதிகளில் ஒருவரான அடொல்ஃப் ஐச்மன் என்பவன் மட்டும் 60 லட்சம் யூதர்களின் கொலைகளுக்குப் பொறுப்பாயிருந்தான். இந்தக் கொடுமைகளுக்கு அஞ்சி, உலகெங்கும் யூதர்கள் அகதிகளாக அலைந்தார்கள். மேற்கு நாடுகளில் அவர்களுக்கென்று அமைத்த அகதி முகாம்களில் காலங் கழித்தார்கள்.

அகதிகளாக ஓடாமல் ஹிட்லரின் நாசிசக் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டங்கள் நிகழ்த்தியவர்களும் யூதர்கள் மத்தியில் இருக்கவே செய்தார்கள்; மறைமுகமான கெரில்லாப் போராட்ட முறையில் அவர்கள் ஜேர்மனிய நாசிப்படையினரை எதிர்த்துத் தாக்கினார்கள். இந்தப் போராட்டங்களில் பல சிறுவர்களும் பங்கேற்கவே செய்தார்கள் யூதர்களின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு சாக்கடைக் குழாயினூடாகவும் நுழைந்துசென்று டலவகைக ளிலும் உதவியதோடு, தாக்குதலிலும் ஈடுபட்ட ஒரு எட்டு வயதுச் சிறுவனின் வீரதீரம், எவரையும் மெய்சிலிர்க்க வைப்பதாகும். பின்னல் இது நாசிப் படையினரால் கண்டு பிடிக்கப்பட்டு சாக்கடைக் குழாயினுள் வைத்தே அந்தச் சிறுவன் குண்டுவைத்துக் கொல்லப்பட்ட சம்பவமும், சோகம் நிறைந்த ஒரு வரலாறே ஆகும்.

இத்தாலியின் பாசிச ஜடாமுனியாகிய ஹிட்லரின் கூட்டாளியான முசோலினியும் இவ்வாறன கொடுமைகளின் உறைவிடமாக இருந்தவனே தான். இவன் ஆரம்ப காலத்தில் ஒரு கொமயூனிஸ்டாகவே இருந்தவன் என்பது தான் விசித்திரமானது. சுவிற்சலாந்தில் இருந்த காலத்தில் அங்கு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த லெனினைச் சந்தித்த பின்னல், இவன் ஒரு கொம்யூனிஸ்ட் ஆக மாறினன். இத்தாலி திரும்பிச் சென்றதுமே இவன் அதற்கு நேரெதிர்மாறன இயக்கத்தைத் தொடங்குபவனுக மாறினன். பாசிசப் போக்கின் ஆரம்பகாலத்தில் இவன் மேற்கொண்ட நடவடிக்கை, கொம்யூனிஸ்டுகளைத் தெருத் தெருவாக வேட்டையாடியதுதான். இதே போலவே 'தேசிய சோசலிசம்' பேசிய ஹிட்லரும், கொம்யூனிசப் புரட்சியாளர்களைத் தெருத்தெருவாக வேட்டையாடிக் குவித்தான். ஸ்டாலினேடு ஒப்பந்தம் (1939) செய்துகொண்ட பின்னல் ரஷ்யாவிடமிருந்து பலவிதமான படைக்கலன்களையும், போர்விமானங்களையும், பெற்றுக் கொண்டவன் ஹிட்லர். ஜேர்மனியில் நாசிப் படைக்கெகிராகப் போராடுவதற்கு உதவியற்றுப் போன நிலையில், ஸ்டாலின் உதவியளிக்க மறுத்த நிலையில் பலவீனமாக்கப்பட்ட ஜேர்மனிய கொம்யூனிஸ்ட் புரட்சியாளர்களை, ஹிட்லர் வேட்டையாடினன். ஸ்டாலினின் உதவி கிடடியிருந்தால் ஜேர்மனியின் உள்ளேயே நாசிசத்தின் முதுகெலும்பு புரட்சியாளர்களால் உடைக்கப்பட்டிருக்கும். ஆனல் கைத்தொழில் வளர்ச்சி பெற்றிருந்த, அறிவு ஜீவிகளின் தலைமைத்துவத்தைப் பெற்றிருந்த ஜேர்மனி கொம்யூனிசத்தின் தலைமை நாடாக மாறிவிடும் என்ற காழ்ப்புணர்வினலும், தலைமைப் போட்டியினலும், ஸ்டாலின் பெரிய தவறிழைத்தார். அந்தத் தவறும் ஹிட்லருக்கு தனது படைக்கலன்களை, விமானங்களை வழங்கிய தவறும் சேர்ந்து, பின்னல் ஹிட்லரின் தாக்குதலினல் தனது நாட்டின் பெரிய கைத்தொழில் மையங்களையே இழந்துபோகும் நிலையைக் கொண்டுவந்தது.

ஜேர்மனியில் கொம்யூனிசப் புரட்சியைத் தோற்கடித்த ஸ்டாலின், தனது நாட்டிலும் கொம்யூனிசப் புரட்சிக்குத் தோள் கொடுத்த புரட்சியாளர்களை விட்டுவிடவில்லை. மத்திய குழு உறுப்பினர்களிலிருந்து கலைஞர்கள், புத்திஜீவிகள் என்று பலதரப்பினரையும், நவீனமயமாக்கல் திட்டத்திற்கு ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்ற குற்றத்துக்குள்ளாகிய விவசாயிகளையும், கொம்யூனிசத்தின் பேரால் கொன்று குவித்தது ஸ்டாலினிய ஆட்சி. சைபீரியத் தடுப்பு முகாம்களில் பட்டினி போட்டுக் கொல்லப்பட்டவர்களுக்கும், ஹிட்லரின் தடுப்பு முகாம்களுக்குள் நச்சுப் புகையினல் கொலையுண்டவர்களுக்கும் ஒடுக்கும் பாணிகளில் தான் வித்தியாசம் இருந்தன. அதுவும் 'உணவும், சமாதானமும் என்ற உடனடித் தேவைகள் ஈடு செய்யப்படும்' என்ற லெனினின் வாக்குறுதியோடு முன்னெடுக்கப்பட்ட பொதுவுடைமைப் புரட்சிக்குப் பின் ஸ்டாலின் தனது ஆட்சியில் ரஷ்ய மக்களுக்கு வழங்கியதோ பட்டினியும் போரும் தான். சைபீரியத் தடுப்பு முகாம்களில் பத்துப்பதினைந்து பேர் கொண்ட குழுவினரிடையே ஒரு ரொட்டியை வீசி, நாய்களைப் போல் பிடுங்கி உண்ண வைத்து, நாளடைவில் சாகவிட்ட கேவலம் ஸ்டாலினுக்கே உரியது. தற்போதைய ரஷ்யாவின் புதைபொருளாய்வில் அகப்படும் எலும்புக் கூடுகள் எல்லாம் இந்தக் கொடுமைகளின் சின்னங்களே தான்.



ஹிட்லரின் மரணமுகாமில் யூதர்கள்

இந்த வகையில் பார்க்கும் போது ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் ஆகிய மூவரும் ஒரே நேர்கோட்டில் வந்து நிற்கிறார்கள். அடிப்படையில் சர்வதேசப் பொதுவுடைமைப் போக்குள வளர்ச்சியைக் முறுகத் தறித்ததில், மூவரும் ஒரே பங்கையே வகிக்கின்றனர். ஈவிரககமற்ற, மனிதத் தன்மையற்ற கொலைகளில் மூவரும் ஒருவரேதான். சிலவேளைகளில் ஸ்டாலினிசக் கொடுமைகளுக்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றும்; ஒரு வர்க்கம் இன்னொரு உடைமை வர்க்கத்தின் மீது புரியும் அத்தியாவசியமான ஆதிக்கம் என்றும். தத்துவ முலாம் பூசலாம். அப்படியென்றல் ஸ்டாலின் கொலை செய்தது முதலாளிகளையும் பிரபுக்களையுமா? இல்லை. உண்மையில் அவரால் கொலையுண்டவர்களில் பெருமளவானேர் கொம்யூனிஸ்டுகள். அதுவும் ஒக்ரோபர் புரட்சியை நடாத்திய பெரும் அறிவு ஜீவிகளும், தியாகிகளும் தான் பாட்டாளிவர்க்கப் புரட்சியை ஆவலுடன் வரவேற்ற கொம்யூனிச ஆதரவாளர்களேதான். அப்பட்டமான குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஹிட்லரும் முசோலினியும் அவர்கள் காலத்திலேயே அழிந்து போனர்கள். ஸ்டாலினே இறந்து போன பின்னர் இன்று வரலாற்றல் கொல்லப்படுகிறார். அவரது கொடுமைகளும் தவறுகளும் இன்று வெளித்தெரிய வருகின்றன. எனவே ஹிட்லர், முசோலினி, ஸ்டாலின் போன்ற ஒடுக்கு முறையாட்சியாளர்கள் வரலாற்றினல் அழிக்கப்படுவார்கள் என்பதை, எல்லாச் சமகால அரசியல் வாதிகளும் உணர வேண்டும். □

சு. வில்வரத்தினம்

---

# இளவட்டம்

புதிய இளங்கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களுக்கெனத் தனியான பகுதியொன்றை ஆரம்பிக்குமாறு, பலர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் வகையிலேயே இப்பகுதி ஆரம்பிக்கப்படுகிறது; ஒன்றுவிட்டொரு கிழமை இப்பகுதி வெளிவரும். இப்பகுதிக்குக் கவிதை அனுப்புவோர் கவிதைப் பிரதியின் மேற்பக்கத்தில் இளவட்டம் எனக் குறித்து, அனுப்புதல் வேண்டும்.

## வாழ்வு நிலைக்குமா ?

சின்ன வயதில் ......
"செய்யக் கூடாதன" என்று
ஆசிரியர் சொன்னதெல்லாம்
செய்யக் கூடியன
ஆகி விட்டதே !

உலகில்
அதர்மம் தானே
அரசு நடத்துது
தர்ம சிந்தை
உடைய என்னல்
வாழ முடியலையே!

நினைக்க முடியாதன
எல்லாம்
நிகழும் பூமியில்
உயிர் வாழ்தல்
முடியாத தாயிற்றே
நாளை
இருப்பேனே என்பது
கேள்விக்குறி ஆயிற்றே !
பயத்தில் தேயும்
மனித ஆயுள்
குறுகலாச்சே !

ஒன்றுபடல் என்பது
வெறும் கனவா
மனித நேசம் என்பது
வெறும் பேச்சா
எதிர்காலம் என்பது
சூனியம் தானு !

மனிதர் வாழ்வரா
இனி
மனிதம் நிலைக்குமா
கொடுமை குறையுமா
எங்கள்
வாழ்வு நிலைக்குமா ?

— அழ. பகிரதன் □

## இன்னமும் நீ...

பெண்ணே .....
உலகம் உனக்கு
மறுக்கப்பட்ட
பிரதேசம் ......
உன்னல்
சுதந்திரமாக எங்கும்
நுழைய முடியவில்லையே ......
பெண்விடுதலைக்காக
இடைக்கிடை
ஒலிப்பது
வெறும் குரல்கள்
மட்டுமே ......
இன்னமும் உன்னைக்
கொடிகளாகவும் ......
மலர்களாகவும் ...
எத்தனை கற்பனைகள்
உன்னல்
துப்பாக்கியாகவும்
பீரங்கிகளாகவும்
வாழமுடியும்
ஆனலும்
இன்னமும் நீ
யதார்த்தத்தில்
கட்டில் மெத்தைகளாகவே
இருக்கிறய்.

— நெடுந்தீவு லக்ஸ்மன். □

## புகழ்ச்சி

பேதை மனிதர்களே !
உங்கள்
போதை நிறைந்த
புத்தியினல்
யாரையும்
போற்றுவீர்கள்
புகழ்வீர்கள்.

அவர்களைக்
கண்டீர்களா ?
வாழ்க்கையை
கண் கொண்டு
பார்த்தீர்களா ?

பிறகென்ன
யாரோ
எவரோ
கூறியதைக் கேட்டு ......

— சாவ. சண்முகதாசன் □

## மௌனிகள்

மரணம்,
மனிதனை மௌனியாக்கிறது.
இங்கு
மௌனமே வாழ்வாகிவிட்டது.
நாம்,
வாழ்ந்து கொண்டிருக்கிறேமா?
மரணித்து விட்டோமா?

— சன் □

## உருளும் உலகில்

# சி. ஐ. ஏ யின் கொலைகள்

பாகிஸ்தானின் ஜனாதிபதி ஆக இருந்த ஷியா - உல் - ஹக்கின் மரணத்திற்கு சி. ஐ. ஏ தான் காரணம் என்ற கருத்து தற்பொழுது பாகிஸ்தானில் வலுவடைந்து வருகின்றது. பாகிஸ்தானில் எதிர்க்கட்சியினர் இக்குற்றச் சாட்டினை சி ஐ ஏ. மீது தொடர்ந்து கூறிவருகின்றனர். ஷியா 1988 ஆம் ஆண்டு இறந்த போது 'இவரது மரணம் ஒரு விபத்து அல்ல என்றும், இது ஒரு திட்டமிடப்பட்ட கொலை நடவடிக்கை' என்றும், இதற்கு இந்தியாவின் உளவுப்படையாகிய 'றோ' (RAW) அல்லது சோவியத்தின் உளவுப்படையாகிய கே. ஜி. பி (K G B) அல்லது ஆபகானிஸ்தானின் உளவுப் படையாகிய சாட் (Shad) ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று பொறுப்பாய் இருக்கலாம் என்றும், ஊகம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்தக் கொலை பாகிஸ்தானின் உள்வீட்டுப் பிள்ளையாகிய சி ஐ ஏ. யினால்தான் செய்யப்பட்டதென பெருமளவு நம்பப்படுகிறது.

உளவுப்படைகள் கொலைகளைச் செய்யும் போது தடயங்களை விட்டுச் செல்வதில்லை. முடிந்தவரை தடயங்களை அழித்துச் செல்கின்றன. இதனால் ஒரு கொலையை நேரடியாக நிருபிப்பது கடினம். ஆதலினால் இவ்வாறான கொலைகளை, சந்தர்ப்ப சூழலைக் கொண்டும், பல முன்நிகழ்வுகளைக் கொண்டும், அடையாளம் காண முனைவது தான் சாத்தியமானதாகும். அவ்வாறான முறைமையின் மூலம் இக்கொலையைப் பரிசீலனை செய்வோம்.

அமெரிக்காவினது ஆட்சி அதிகாரம் ஜனாதிபதியினதும், கொங்கிரஸினதும் கையில் உள்ளது போலத் தோன்றும். ஆனால் உண்மையில் சி.ஐ ஏ. யினதும் பென்ரகனதும் (இராணுவத் தலைமைப் பீடம்) கையிலேயே அது உள்ளது. அமெரிக்காவினது பொருளாதார நலனும் தேசநலனும் அமெரிக்காவின் எல்லையைக் கடந்து. உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்றன. ஆதலினால் அமெரிக்க அரசியலில் வெளிநாட்டரசியல் என்பது பெரும் முக்கியத்துவம் வகிக்கிறது. அதன் வெளிநாட்டரசியலானது பிரதானமாக உளவுப்படையிலும், இராணுவ பலத்திலுமே தங்கியுள்ளது. ஆதலினால் சி.ஐ.ஏ.யும், பென்ரகனும் எடுக்கும் முடிவுகளை அமுல்படுத்தும் வெறும் சாதனமாக மட்டுமே அமெரிக்க ஜனாதிபதியும் கொங்கிரசும் அமைந்துள்ளன. உண்மையில் இரத்தம் தோய்ந்த கரங்களுக்குப் போடப்பட்டுள்ள ஒரு வெள்ளை உடுப்புத்தான் வெள்ளைமாளிகையின் ஜனாதிபதியும், கொங்கிரஸ் உறுப்பினர்களுமாவர்.

வெளிநாடுகளில் தமக்கேற்ற அரசியற் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய ஆட்களைத் தோற்றுவிப்பது, சி.ஐ ஏ யின் பிரதான பணிகளில் ஒன்று. நேரடி இராணுவ நடவடிக்கைகளினால் சாதிக்க முடியாத பல விடயங்களை, சி. ஐ ஏ மிக இரகசியமாகச் சாதித்து விடுகின்றது. வெளிநாடுகளிலுள்ள தமக்குப் பாதகமான ஆட்சியாளரை, அல்லது தமக்குச் சாதகமான ஆட்சி தோன்றுவதற்குத் தடையாகவுள்ள அரசியல்வாதிகளைக் கொலை செய்துவிடுவதன் மூலம், தமக்குச் சாதகமான சூழலைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளைச் சி ஐ ஏ. உலக அரங்கில் நிறைவேற்றி வருகின்றது.




'அபு' வரைந்த கார்ட்டூன்

ஷியா – உல் – ஹக் : "ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படை சென்ற பின்னர் என்ன செய்யப் போறீர் ?"

டொனல்ட் ரீகன் : "அமெரிக்கா உமக்கு என்ன செய்யுமென்று கேளாதே; அமெரிக்காவுக்கு நீர் என்ன செய்யலாமென்று கேளும்."

இவ்வாறு மூன்றாம் உலக நாடு நாடுகளைச் சேர்ந்த பல தலைவர்கள் சி. ஐ. ஏ. யின் இரகசியக் கொலைக்கு இரையாகியுள்ளனர். அந்தக் கொலை விபத்து என்ற வடிவத்தில் அமையலாம், அல்லது உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றின் மூலம் ஓர் உள்நாட்டு நபர்

□ சரண்யன □

மூலமான கொலை என்ற வடிவத்திலும் அமையலாம், அல்லது சுகப்படுத்த முடியாத நோய்க்கிருமி ஏற்றப்பட்டு நோய்வாய்ப்பட்டு படிப்படியாக நோய் என்றதன் பேரில் இறக்கவைக்கப் படலாம். இப்படிப் பல முறைகளை, அது கொலை செய்யக் கையாளும்.

ஈரானின் மன்னன் ஷா அமெரிக்காவின் நல்ல நண்பனாக இருந்தவர். புரட்சியின் மூலம் அவர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்ட பின்பு, காலகதியில் அவர் அமெரிக்காவிற்கு அரசியல் ரீதியில் பெரும் சுமையாக அமைந்தார். அவரது மரணம் மட்டுமே அமெரிக்காவின் சுமையை இறக்கக் கூடிய ஒரே ஒரு குறுக்கு வழியாக இருந்தது. அதனால் அவர் நோய்வாய்ப்பட்டு இறக்கக்கூடிய நடவடிக்கைகளைச் சி. ஐ ஏ. கையாண்டு படுக்கையில் 6 மாதம்வரை கிடத்தி வைத்து, இறுதியில் மரணமடைய விடப்பட்டார் — என்ற கருத்து உள்ளது.

இப்போது நூற்றுக்கு நூறு நம்பகமான ஒரு நடவடிக்கையைப் பார்ப்போம். எகிப்தின் ஜனாதிபதியாக இருந்த நாஸரைக் கொல்ல சி ஐ ஏ. பல முயற்சிகளைச் செய்தது, அம்முயற்சிகளுள் ஒன்றாக, பிரித்தானியாவின் உளவுப் படையின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றான M 1+ எனப்படும் பிரிவில் முக்கிய பொறுப்பாளராகப் பணியாற்றிய பீற்றர் றைட் என்பவரிடம், நாஸரைக் கொல்ல 1960 களின் ஆரம்பத்தில் சி. ஐ. ஏ. உதவி கோரியிருந்தது. மத்திய கிழக்கில் உளவு வேலைகளில் இவர் அதிக நிபுணராய் இருந்தவர்; எனவே இவரிடம் சி. ஐ. ஏ. அதற்கான உதவியைக் கேட்டிருந்தது. சி. ஐ. ஏ. இவ்வாறு நாஸரைக் கொலை செய்ய உதவுமாறு தன்னிடம் உதவி கேட்டது பற்றிய விபரங்களை, பீற்றர் றைட் தான் எழுதிய ஸ்பை கச்சர் (Spy Catcher) என்ற நூலில் வெளியிட்டுள்ளார்.

இத்தகைய பின்னணியில் ஷியா — உல் — ஹக்கின் மரணத்தைப் பார்ப்போம். அமெரிக்காவின் நட்பு நாடு பாகிஸ்தான். எனவே அதன் ஜனாதிபதியைக் கொல்லவேண்டிய தேவை சி ஐ ஏ க்கு இருக்காது எனப், பலர் நம்பலாம். ஆனால் இதன் உண்மை மறுவழமானது. பாகிஸ்தான் அமெரிக்காவின் நட்பு நாடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பாகிஸ்தானில் ஸ்திரமான தலைமை வளர்ந்தால் அது அமெரிக்காவின் பேரம் பேசும் பலத்தைக் குறைத்து, பாகிஸ்தானின் பேரத் தன்மையை அதிகரித்து விடும். ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் இருந்ததைப் பயன்படுத்தி ஷியா, தனது நிலையைப் பெரிதும் ஸ்திரப்படுத்தினர்.

ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் புகுந்ததும் பாகிஸ்தானில் தங்கிநிற்க வேண்டிய அவசியம், அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. இந்த நிலையில் அமெரிக்காவின் பலவீனத்தைப் புரிந்துகொண்ட ஷியா, அமெரிக்காவிடம் அதிக நேரம் பேசினர். 1980 ஆம் ஆண்டு காட்டர் நிர்வாகம் பாகிஸ்தானுக்கு ஒதுக்கிய நிதி உதவியைப் போதாதெனக் கருதிய ஷியா, அந்த நிதியை அற்பமானதெனக் காட்டுவதற்கு, "இந்தக் கச்சான் கோது என்னத்துக்கு" எனக் கிண்டலாகக் கூறி நிராகரித்தார். காட்டர் ஒரு வியாபாரி என்பதை மனதிற்கொண்டு பார்க்கும் போது, இந்தக் கிண்டலின் காத்திரம் இன்னும் துலங்கும். இவ்வாறு பேரம் பேசி பாகிஸ்தானிடமிருந்து வளர்வதை, அமெரிக்கா விரும்பவில்லை. ஆனால் சோவியத் இராணுவத்தை ஆப்கானிலிருந்து வெளியேறும் வரை, பாகிஸ்தானில் ஒரு ஸ்திரமான தலைமை இருப்பது அவசியமாக இருந்தது. ஆப்கானிலிருந்து சோவியத் இராணுவம் வெளியேறுவது நிச்சயம் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்ட பின்பு ஷியா அமெரிக்காவிற்குத் தேவைப்படவில்லை. மேலும் ஷியா தொடர்ந்து பதவியிலிருப்பது, அமெரிக்காவிற்கு இன்னொரு வகையில் பாதகமாகவும் இருந்தது. அதாவது ஷியா உயிருடன் இருந்தால், சோவியத் இராணுவம் வெளியேறியதும் ஆபகானை பாகிஸ்தானுடன் இணைத்து. ஓர் இஸ்லாமியப் பெரும் அரசை ஸ்தாபித்துவிடலாம் என்ற அச்சம், அமெரிக்காவுக்கு இருந்தது. ஆப்கான் பாகிஸ்தானுடன் இணைந்து பலம்பொருந்திய இஸ்லாமிய அரசு தோன்றுவது, எதிர்கால அமெரிக்க நலனுக்குப் பாதகமானது. எனவே, இதனைத் தவிர்ப்பதற்கு, ஷியாவின் மரணம் ஒன்றுதான் ஒரே வழியாக அமெரிக்காவிற்கு இருந்திருக்கலாம்.

மேலும் ஷியாவின் அணுகுண்டுத் தயாரிப்பு முயற்சி அமெரிக்காவிற்கு விருப்பமில்லாதிருந்ததுடன், வேறுபல தலையிடிகளையும் அமெரிக்காவிற்குக் கொடுத்தது. பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்தால் அது இஸ்லாமியக் குண்டாக அமைந்துவிடும் என்றும், அதனைத் தடுக்குமாறும் இஸ்ரேல் அமெரிக்காவிடம் வற்புறுத்தி வந்தது. ஷியா அமெரிக்காவின் விருப்பத்தை மீறியது மட்டுமன்றி, அமெரிக்காவிடமிருந்து அணுகுண்டு தயாரிப்பதற்கான சாதனங்களைக் களவாடியும் உள்ளார். எனவே, இந்த அணுகுண்டு முயற்சியைத் தடுக்க இப்படி ஒரு கொலை அவசியப்பட்டது.

இவை மட்டுமன்றி இன்னுமொரு முக்கிய காரணமும் இருந்தது. இந்திய – அமெரிக்க உறவு வளர்வதற்கு ஷியா தடையாக இருந்தார். இந்தியாவில் அமெரிக்காவிற்குச் சார்பான பச்சை விளக்குகள் காட்டப்பட்டபோது, ஷியாவின் நடவடிக்கைகளால் அந்த உறவை வளர்ப்பது அமெரிக்காவுக்குக் கடினமானதாய் இருந்தது. மேலும் ஷியா 12 ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருந்தமையாலும், ஏனைய வேறு காரணிகள் மூலமும் ஸ்திரமான தலைவராகி விட்டார். அந்த ஸ்திரத் தன்மை அமெரிக்காவிற்குப் பாதகமாய் அமைந்தது. எனவே, இவரைக் கொல்ல வேண்டிய தேவை அமெரிக்காவுக்குப் பலவழியாலும் ஏற்பட்டது.

ஆனால், அமெரிக்கா கொலை செய்திருக்காது என்று ஸ்ரீமான் பொதுஜனம் கருதக் கூடிய ஒரு காரணம் வெளியில் தெரிகிறது. அதாவது அந்தவிமானத்தில் அமெரிக்கத் தூதரும் சென்றார் என்பதும், அவரும் ஷியாவுடன் மரணமடைந்தார் என்பதும், எனவே சி. ஐ ஏ. கொலை செய்திருக்க முடியாதென்பதும் தான் அந்தக் காரணம். இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகத் திட்டமிடப்பட்டிருக்கலாம். அந்தத் தூதரெடுத்துச் சென்ற பாக்குக்குள் சக்திவாய்ந்த வெடிகுண்டுகூட இருந்திருக்கலாம்; அது வெடிகுண்டு என்று தெரியாமலே அவர் அதனை எடுத்துச் செல்லும்படியான ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கலாம். தூதர் என்ற வகையில் இவரது பாக் சந்தேகிக்கப்பட மாட்டாது; பரிசோதனை செய்யப்படவும் மாட்டாது; தனது ஆள் ஒருவரை அவருக்கே தெரியாமல் பலி கொடுத்து, தனது தேவையைப் பூர்த்தி செய்வது சி ஐ. ஏ.க்கும், அரசியலிலும் சாதாரண விடயம். □

இந்தப்பக்கத்தை அன்பளித்தவர்
எஸ். சிறிநிவாசன்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
A 22

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# பொறுப்பற்ற பகுதிநேர அரசியற் தலைமை

தமிழ் பேசும் மக்களின் அரசியற் தலைவர்கள் பொதுவாக பகுதிநேர அரசியல் வாதிகளாகவே காணப்பட்டனர்: குறிப்பாக 19‚7 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரை இந்நிலை பெரிதும் நீடித்தது. சேர். பொன். இராமநாதன் முழுநேர வழக்கறிஞராய் கடமையாற்றிக் கொண்டு ஓய்வு நேர நேரத்தை அரசியலில் செலவிட்டார். இவரது சகோதரன் சேர். பொன். அருணாசலம் சிவில் சேவையாளனைப் பணியாற்றி அதிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு பொழுது போக்காக அரசியலில் ஈடுபட்டார். இச்சகோதரர்களின் அரசியலின் பின்பு முக்கிய தலைவராக வந்த ஹொனறபிள் கே. பாலசிங்கம் அவர்களும் ஒரு முழு நேர வழக்கறிஞராகவும் பகுதி நேர அரசியல் வாதியாகவுமே செயற்பட்டார்.

இவற்றின் பின்பு ஜி ஜி. பொன்னம்பலத்தின் ''சகாப்தம்'' தோற்றம் பெற்றது. இவர் தனது முழுமுதற் கவனத்தை வழக்கறிஞர் தொழிலிலும் எஞ்சிய நேரங்களை அரசியலிலும் செலவழித்தார். பொன்னம்பலத்தின் 'சகாப்தம்' முடிவடைந்து செல்வநாயகம் ''சகாப்தம்'' ஆரம்பமாகியது. செல்வநாயகமும் இவ்வாறே முழுநேரத் தொழிலாக வழக்கறிஞராகவும் பகுதிநேர அரசியலவாதியாகவும் செயற்பட்டார். அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் தலைமையும் அவ்வாறே. தலைவர்கள் பகுதிநேர அரசியல்வாதிகளென்றால் அவர்களது பரிவார அரசியல் வாதிகளின் நிலையை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### சுதேசி

அதேவேளை மறுவளமாக சிங்கள அரசியல் வாதிகளின் நிலையை எடுத்துக்கொள்வோம். பரன் ஜெயதிலகா, எவ்.ஆர். சேனநாயக்கா, டி.எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர் ஜெயர்த்தனா, ஆர். பிரேமதாஸ, ஸ்ரீமா பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா போன்றோரெல்லாம் பொதுவாக முழுநேர ஆயுள்கால அரசியல் வாதிகளாகச் செயற்பட்டு வந்துள்ளனர்.

இத்தகைய முழுநேரச் சிங்கள அரசியல் வாதிகளுக்கு எமது ஓய்வு நேர, பகுதி நேர அரசியல்வாதிகளால் எவ்வாறு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் புத்தி சாதுர்யத்துடன் நடக்கமுடியும்? எமது இன்றைய துயரங்களுக்கு எமது பழைய தலைமைகளின் பொறுப்பற்ற செயலும் ஒரு முக்கியகாரணம் என்பதை நாம் கணிக்கத் தவறலாகாது. இன்னொரு முக்கிய தவறினை புதிய தலைவர்கள் விட்டனர். அதாவது அவர்களின் அரசியலில் அறிவியல் ரீதியான கண்ணோட்டம் என்பது மருந்துக்கும் இருக்கவில்லை. சரியான அரசியல் வழிமுறைகள் எவை என்று ஆய்வுசெய்து கண்டறியாமல் நாடாளுமன்றக் கதிரைகளை இலக்காகக் கொண்ட வெறும் கோசங்களை எழுப்பி கண்ணை மூடிக்கொண்டு சுவரில் மோதிய மாதிரி அத்தலைவர்களது வழி நடத்தல்கள் அமைந்திருந்தன. எனவே பழைய அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எதனையும் வென்று கொடுக்காமற் போனமைக்கு அவர்களது பகுதிநேர அரசியலும், அறிவியற் கண்ணோட்டமற்ற அரசியலும், அர்ப்பணிப்பற்ற போக்குக்களும் கூட காரணங்களாகும் என்பதை துயரத்துடன் ஏற்றுத்தான் ஆகவேண்டும். □

# தவறிப்போன சிங்களப் புத்திஜீவிகள்

''1922 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டம் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் அதிகபட்ச மத்தியமயமாக்கலைச் செய்ததும் ஜனாதிபதி முறைமையைக் கொண்ட 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டம் அந்த மத்தியமயமாக்கலை மேலும் ஸ்திரப்படுத்தியது. என்று ஊர்மிலா பட்னிஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி இவர் தெளிவான பார்வையற்றவர் ஆயினும் மேற்கூறிய இவரது கருத்து சரியானது.

பல்லினங்கள் வாழும் இலங்கையில் மாகாண ஆட்சி முறையினை பரிசீலித்துப் பார்ப்பது நலம் பயக்கக்கூடும் என்று டொனமூர் குழுவினர் 1928 ஆம் ஆண்டு அபிப்பிராயம் கூறியிருந்தனர் தமிழரசுக் கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி அமைப்பு முறையைக் கோரியது. ஆனால் குடியரசு அரசியற் திட்டங்களோ ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் மேலும்மேலும் மத்திய மயமாக்கலைச் செய்தன.

எனவே தமிழ் மக்களின் கோரிக்கைக்கு விட்டுக் கொடுப்பைச் செய்வதற்குப் பதிலாக மேலும் மேலும் அதற்கு எதிர்மாறான இறுக்க நிலையினைக் கடைப்பிடித்தமை தான் சிங்கள ஆட்சியாளர்களின் கைங்கரியமாக இருந்தது. இத்தகைய அரசியல் போக்கு தமிழ் மக்களை விட்டுக் கொடுப்பற்ற மறுமுனைக்குத் தள்ளியது. சிங்கள அரசியல் வாதிகளின் மோசமான போக்கு இவ்வாறு அமைந்திருந்த போது சிங்களப் புத்திஜீவிகள் கூட இத்தவறுகளைச் சுட்டிக்காட்டப் பொதுவில் தவறிப்போயினர். □

### குருடர் சாதனை

சேர் பிரான்சிஸ் ஜோசப் கம்பெல் 1832 முதல் 1914 வரை வாழ்ந்தவர். தனது 4 ஆவது வயதில் ஏற்பட்ட விஷக் காய்ச்சலால் கண் குருடானவர். ஆனால் விடாமுயற்சியுடன் வாழ்க்கையை வெற்றி கொள்ள நினைத்தார்; செய்தும் காட்டினார். ஆம், ஆல்ப்ஸ் மலைத்தொடரிலுள்ள 'மொன்ட் பிளான்க்' மலையின்மீதேறி சாதனை புரிந்த குருடர் இவர். இக் குன்றின் உயரம் 915,771 அடியாகும்.

### கெட்டிக்காரர்

படிப்பில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் பெண்களே. இதனை இங்கிலாந்து உளவியல் நிபுணர்கள் 11 பாடசாலைப் பிள்ளைகளை வைத்து ஆய்ந்து கூறினார்கள். படிப்பில் கெட்டித்தனம் உடையவர்கள் பெண்களே.

பலநாடுகளில் 'கலாசாரம், பாரம்பரியம்' என பெண்களின் அறிவை மழுங்கடித்துவிட்டார்களே தவிர பெண்களே அதி அறிவு வாய்ந்தவர்கள் என்கின்றனர் அவர்கள்.

— தி. தவபாலன் □

# நன்னீர் மீனைக் கொல்லும் மர்ம நோய்

சென்ற சில வாரங்களாக கொழும்பைச் சுற்றியுள்ள நீர் நிலைகளில் மீன்கள் செத்து மிதக்கின்றன. அவற்றின் உடலில் பெரிய பெரிய கொப்புளங்கள் காணப்படுகின்றன; கொப்புளங்கள் உடைந்து புண்களும் தென்படுகின்றன.

இந்த விகமான நோய் இலங்கைக்குப் புதியது; ஆனால் ஆசியாவுக்குப் புதியதல்ல. இந்தக் கொப்புள நோய் 1972 ஆம் ஆண்டில் முதன் முதலில் அவுஸ்திரேலியாவில் அவதானிக்கப்பட்டது. அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் அந்நோய் சிங்கப்பூர், இந்தோனேசியா. தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குப் பரவியது. பின்பு, கம்பூச்சியா, வியட்நாம், பர்மா, பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், இந்தியா நாடுகளுக்கும் பரவியது.

1987 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தான் அந்தப் பொல்லாத நோய் இலங்கைக்கு வந்தது. களனி ஆற்றிலும் அதைச் சூழ்ந்துள்ள நீர் நிலைகளிலும் மீன்கள் இறக்கத் தொடங்கின. ஒன்றரை மாதங்களுக்குள் ஹமில்ட்டன் கால்வாயினூடாக நீர்கொழும்பு. வாய்க்கால், கிரியல்ல ஆகிய பகுதிகளுக்கு அந்நோய் பரவியது. ஆனால் மாதம்பைக்கு அப்பால் அக்கொப்புள நோய் பரவவில்லை. அதே வேளையில் கொழும்பிற்குத் தெற்கே களுகங்கை வரையும் பொல்கொடை ஏரி வரையும் நோய் பரவியது.

இந்த நோய் முதலில் ஈரவலயப் பகுதியில்தான் காணப்பட்டது. சில காலங்களில் அந்நோய் குறைந்து காணப்படுகின்ற போதிலும் அது முற்றாக நீங்கி விடவில்லை. இப்பொழுது வரண்டபிரதேசங்களுக்கும் அந்நோய் பரவியுள்ளது. மகாவலித்திட்டம் முழுவதும் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. இது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை. மகாவலித்திட்டத்திலுள்ள நீர்த் தேக்கங்களுக்கு நோய் இப்பொழுது பரவிக் கொண்டிருக்கின்றது.

தாய்லாந்தை இந்த நோய் தாக்கிய போது நோய்க்கான காரணத்தை அறிவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் ஆசியாவின் மீன் கொள்கை நிலையம் என்ற பெயரில் ஓர் ஆராய்ச்சி நிலையத்தை பாங்கொக் நகரில் நிறுவியது. இலங்கை உட்பட பதினொரு நாடுகளில் நிலவும் இந்நோய்க்கான காரணம், இந்நோய்க்கும் சூழலுக்குமுள்ள தொடர்பு ஆகியவைகளை ஆராய்வதே இந்நிலையத்தின் பணி. இத்திட்டத்தின் கீழ் மூன்று இலங்கை நிபுணர்கள் ஆய்வுகளை நடத்துகின்றனர். திருவாளர்கள் மகிந்த குலதிலகா, எல். கே. எஸ். பாலசூரியா ஆகிய இருவரும் கடற்றொழிலமைச்சைச் சேர்ந்தவர்கள். டொக்ரர் ரொகான் சுபசிங்க, கொழும்பு பல்கலைக் கழகத்தின் உயிரியல் துறையின் மூத்த விரிவுரையாளர்.

இம்மூவரும் நடத்திய ஆய்வுகளிலிருந்து நோயைப் பற்றிய சில முக்கிய தரவுகள் கிடைக்கப்பட்டுள்ளன. மீன்களின் உடலில் சிவந்த பரப்புகள் தோன்றும் பின்பு அவை கொப்புளமாகும். கொப்புளங்கள் வெடித்துப் புண் தோன்றும்

களனி பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பேராசிரியர் எச். எச். கொஸ்தாவும் கொப்புள நோயால் பீடிக்கப்பட்ட மீன்களை ஆராய்ந்துள்ளார். தலையில் அரைவாசியை இழந்த நிலையில் சில மீன்கள் நீந்திக் கொண்டிருந்ததை அவர் அவதானித்துள்ளார். அவைகள் சில நாட்களுக்குள் இறந்துவிடும்.

உள்ளூர் இன மீன்கள்/தான் கொப்புள நோயால் இறக்கின்றன. இறக்குமதி செய்யப்பட்டு வளர்க்கப்படும் திலாப்பிய, கார்ப் மீன் இனங்கள் இந்த நோயால் பாதிக்கப்படவில்லை.

இந்த நோய்க்குக் காரணம் என்ன? பற்றீரியாவா? பங்கசுவா? வைரஸா? அல்லது செயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள் ஆகியவையா? இவற்றில் எது காரணம் என்பதைக் கண்டு பிடிப்பதற்கு இலங்கையில் மட்டுமல்ல வேறு பல ஆசிய நாடுகளிலும் ஆய்வுகள் நடக்கின்றன.

டொக்ரர் சுபசிங்கா இலங்கையில் இத்துறையில் ஆய்வுகளை நடத்துகின்றார். இதுவரை 100க்கு மேற்பட்ட நோய்வாய்ப்பட்ட மீன்களை அவர் மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார் அவர் ஆராய்ந்த அத்தனை மீன்களிலும் ஏரோமோனஸ் ஐதரோபிலா என்ற இனத்தைச் சேர்ந்த பற்றீரியா இருப்பதைக் கண்டார். இந்த பற்றீரியா நோய்ப்பட்ட மீன்களின் ஈரலிலும் காணப்பட்டது. இந்த பற்றீரியா மிகவும் பொல்லாதது; தான் தாக்கும் பிராணிகளை அழித்துவிடவல்லது.

கொப்புள நோய்க்கு இந்த பற்றீரியா தான் காரணமாக இருக்க வேண்டும் என்பது டொக்ரர் சுபசிங்காவின் நம்பிக்கை. ஆனால் இந்தப் பற்றீரியா எப்படி கொப்புள நோயை உண்டு பண்ணுகிறது என்பது இன்னும் அறியப்படவில்லை. அதைக் கண்டு பிடிக்க முயற்சி எடுக்கிறார் அவர்.

வைரஸ்தான் மீன் கொப்புள நோய்க்குக் காரணம் என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் அக்கருத்து இன்னும் நிரூபிக்கப்படவில்லை. இறந்த மீன்களிலிருந்து வைரசைப் பிரித்தெடுக்கும் வசதிகள் இலங்கையில் இல்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரியும்; வைரஸ்தான் நோய்க்குக் காரணம் என்றால் அதற்கு மருந்தே இல்லை.

இந்நோய்க்கு பங்கசுதான் காரணம் என்று பங்களாதேஷ் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர் ஆனால் இலங்கையில் அதற்கு எதுவித சான்றுமில்லை என்கிறார் டொக்ரர் சுபசிங்க.

விவசாய இரசாயனப் பொருள்கள் தான் காரணமாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகமும் நிலவுகின்றது. இக்கருத்தை டொகரர் நிக்கலஸ் பிரெலிச் என்பவர் தெரிவிக்கின்றார் அக்கருத்து இன்றும் ஆராய்ச்சி நிலையிலேயே உள்ளது.

சூழலும் ஒரு காரணமாக இருக்குமா என்ற சந்தேகமும் நிலவுகின்றது. சூழலில் . ஏற்படும் மாற்றங்கள மீன்களைப் பாதிக்கின்றனவா?

வருங்கால ஆய்வுகள்தான் இதற்கெல்லாம் விடை காண வேண்டும்.

(இலங்கைச் சூழல் ஜேர்னல்ஸ் வெளியீடு) □

படிப்பகம்

www.padippakam.com



# ஜே. கிருஷ்ணமூர்த்தியும்
## அவரது தனிவழியும்

திசை 25. 03. 89 இல் வெளிவந்த எனது கட்டுரை பற்றி அன்பரொருவர் "ஜே. கே. பற்றிய நோக்கு ஒருவித மாயையை ஏற்படுத்துகிறது. காரணம் ஜே. கே. பற்றி அறிந்தது ஆழமாக இல்லை. அவர் பற்றி, அவர் தத்துவ ஞானம் பற்றி வேறு கட்டுரைகளைப் பிரசுரிக்கவும்." என்று எழுதியிருந்தார். திரு. கந்தையா நவரேந்திரன் அவர்கள் 'விழிப்புணர்வு பற்றிய விளக்கங்கள்' என்ற தலைப்பில் நூலொன்றை எழுதியிருக்கிறார். அழகான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் அந்நூல் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் தத்துவத்தை நன்றாகவே தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. அந்நூலை அந்த அன்பருக்குச் சிபார்சு செய்வதோடு, நானும் அதனை உசாத்துணை நூலாகக் கொண்டு என் நோக்கில் சில கருத்துக்களை முன் வைக்கலாம் என்று கருதுகிறேன்.

முதலில் ஜே. கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கைக் குறிப்புகள். 1895 ஆம் ஆண்டில் ஓர் ஏழைப் பிராமண ஆசாரக் குடும்பத்தில் ஜித்து கிருஷ்ணமூர்த்தி பிறந்தார். ஜே. கேயின் முகத்தில் ஓர் அசாதாரண ஒளி பிரகாசிப்பதைக் கண்டு அவரது பன்னிரண்டாவது வயதில் அன்னி பெசந்து அம்மையார் அவரையும் அவர் சகோதரர் நித்தியானந்தனையும் தத்து எடுத்து வளர்த்தார். பிரம்ம ஞான சங்கத்தின் முக்கிய தலைவரான ஆயர் (Bishop) சாள்ஸ் லெட் பீற்றரின் (Charles Lead Beter) முன் மொழியின்படி (Prophecy), உலகத்துக்கு நல்வழி காட்ட அவ்வப்போது உலக ஆன்மீக வழிகாட்டியொருவர் தோற்றுவார் என்ற நம்பிக்கைக்கிணங்க கிருஷ்ணமூர்த்தி அவதரித்தார் என்று பெசந்து அம்மையார் உட்படப் பலரும் நம்பினர். அந்த ஆதர்சத்தை நிறைவேற்றும் வகையில் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு மிகச் சிறந்த முறையில் கல்வி போதிக்க வழி செய்தார். பணம், சமூகத் தொடர்பு ஆகியவற்றுற் கிடைக்கக் கூடிய வசதிகளனைத்தும் கிருஷ்ண மூர்த்திக்கு அளிக்கப்பட்டன. குருவின் திருவடியில் (At the feet of the Master) என்ற பெயரிடப்பட்ட நூல் அவரது 16 ஆவது வயதில் வெளியிடப்பட்டது. 1911 இல் வெளியிடப்பட்ட இந் நூலின் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தியாகத்தான் இருக்க வேண்டும் என்று பலரும் எண்ணினர். கிருஷ்ணமூர்த்தி ஆன்மீக மாற்றம் (Spiritual Transformation) எய்து முன்பு, மிகச் சிறிய வயதில் அவரது கைகளாலேயே எழுதுவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டதெனப் பரவலாக இன்று நம்பப்படுகின்றது.

இவ்விடயம் பிரம்ம ஞான சங்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியது. இதனால் தலைடைந்த ஜே. கேயின் தந்தையார் தம்மிரு புதல்வர்களுக்கும் தாமே பாதுகாவலரென உரிமை பாராட்ட முடிவு செய்து, நீதிமன்றம் சென்றார். வாதிக்காக சேர். சி. பி. இராமசாமி ஐயர் வாதிட, தம் சார்பில் பெசந்து அம்மையார் எதிர்வாதாடினார். கடைசியில் இவ்விளைஞர்களே தமது பாதுகாவலர்களைத் தெரிந்தெடுக்கலாம் எனத் தீர்ப்புவழங்கப்பட்டது. இருவரும் பெசந்து அம்மையாரையே உரிமையாளராகத் தெரிந்தெடுத்தனர். பெற்றோரின் தலையீடு இல்லாமலிருக்க இருவரும் இங்கிலாந்திலுள்ள எமிலி லூட்யைன்ஸ் (Emily Lutyens) என்ற அம்மையாரின் பாதுகாப்பில் விடப்பட்டனர். இங்கிலாந்திலும் சோபோனிலும் இவருக்குக் கல்வி அளிக்கப்பட்டது. Order of the Star என்ற நிலையம் நிறுவப்பட்டு கிருஷ்ணமூர்த்தி அதற்குத் தலைவராக்கப்பட்டார். இவ்வாறு தேவதூதனுக்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன. 1922 ஆம் ஆண்டில் நித்தியானந்தன், –கிருஷ்ணமூர்த்தியின் தம்பியார்–கடும் சுகவீன முற்றார். குணமாவார் என்ற நம்பிக்கையில் கலிபோர்னியாவுக்கு இடம் மாற்றப்பட்டும், அவர் 1925 ஆம் ஆண்டு இறந்தார். இவ்விறப்பு ஜே. கே. இற்கு பெரும் அதிர்ச்சியைத் தந்து, அவருள்ளே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. தமது எண்ணங்களை மறுபரிசீலனைசெய்தார். முடிவு, 1929 ஆம் ஆண்டு அவரது 34 ஆவது வயதில் Order of the star என்ற நிறுவனத்தைக் கலைத்தார். பெசந்து அம்மையாரால் சேர்த்து வைக்கப்பட்ட பெருந்தொகைப் பணம், ஒல்லாந்து நாட்டில் பெரிய அரண்மனை, அது சார்ந்த இடங்கள் அனைத்தையும் உரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்து தமக்கென ஓர் தனி வழி செல்ல முற்பட்டார். கிருஷ்ணமூர்த்தி நூலறிவு நிரம்பப் பெற்றவரல்லர். ஆங்கில மொழியில பாண்டித்யம் பெற்ற இவர் எந்த வொரு பல்கலைக் கழகப் பட்டதாரியுமல்லர். இவ்வளவும் திரு. நவரேந்திரன் அவர்கள் தனது நூலில் தந்திருக்கும் விபரங்கள். எனது கட்டுரைக்கு அவசியமான பகுதிகளை மட்டும் பிரித்தெடுத்து அவற்றைப் பெரிதும் அவருடைய நடையிலேயே தந்திருக்கிறேன்.

## 2

ஜே கே. தேர்ந்து கொண்ட தனி வழி எது? இந்திய தத்துவ ஞான மரபிலிருந்தும் ஏனைய ஆத்மீகப் போக்குகளிலிருந்தும் மூன்று முக்கிய விடயங்களில் அவர் மாறுபடுகிறார்.

1. குரு அல்லது வழிகாட்டி என்று ஒருவரை ஏற்றுக்கொண்டால் உண்மையினின்று அவர் வெகுதூரம் விலகிச் சென்றுவிடுவார்.

2. 'முயற்சி' விடுதலையைக் கொண்டுவராது. 'முயற்சியற்ற நிலை' (Effortless state) தன் பாட்டிலேயே நிகழவேண்டும். மனம் தன்பாட்டிலேயே அமைதியுற வேண்டும்.

3. ஒழுக்கக் கோட்பாடுகள், தர்மம் போன்றவை ஒருவனை உண்மைக்கு இட்டுச் செல்லா. அறிந்த கருத்து— எண்ண வலயத்துள் சுற்றிச் சுழல வைக்கும். எனவே விடுதலையை அடைய வழிகள் ஏதுமில்லை.

இந்த விடயங்கள் முற்றுகவே இந்திய ஆத்மீக மரபை மறுதலிக்கின்றன. புத்தர் தொடக்கம் இன்றைய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ அரவிந்தர், ரமண மகரிஷி அனைவரையும் நிராகரிக்கின்றன. காரணம் இந்திய ஆத்மீகத்தின் அடித்தளமே இவற்றினுல்தான் போடப்பட்டுள்ளது.



ஜே. கிருஷ்ணமூர்த்தி

இப்பொழுது எம் முன் எழும் கேள்வி ஜே. கே சொல்லும் விழிப்புணர்வும் (Awareness) 'பேர் உண்மை' என்று ஞானிகளால் அழைக்கப்படுவதும் ஒன்ரு? ஜே. கே. எழுப்பும் தர்க்கச் சுவட்டைப் பின்பற்றினுல் ஜே.கே. யைத் தவிர ஏனைய ஞானிகள் அனைவரும் 'உண்மையைக் கண்டவர்கள் அல்ல' என்று நிராகரிக்க வேண்டிவரும். இது, சரியா?

### கங்கா - யமுனா

ஜே. கே. யின் வாழ்க்கைக் குறிப்புகள் மிகத் தெளிவாகச் சில செய்திகளை எமக்குத் தருகின்றன.

1. ஜே கே. யின் முகத்தில் 12 வயதிலேயே அசாதாரண ஒளி இருந்திருக்கிறது. இந்த ஒளி இந்திய ஆத்மீகமரபின்படி அவரது முனைய பிறப்புகளின் ஆத்மீகவளர்ச்சியாயிருக்கலாம் இந்தப் பிறப்பின் முயற்சியின்மை effortless) நிலைக்கு வர முன்னைய பிறப்புகளின் முயற்சி காரணமாக இருந்திருக்கலாம்.

2. ஜே. கே. பெரும்பாலான இந்திய ஞானிகள் போல தானுகவே உண்மையைத் தேடிப் புறப்பட்டவரல்லர். புத்தர், ஸ்ரீ இராமகிருஷ்ணர், அரவிந்தர், ரமணர், விவேகானந்தர் அனைவரையும் நினைத்துப் பாருங்கள். எவ்வளவு கஷ்டங்களை, போராட்டங்களை அவர்கள் சந்தித்திருக்கின்றனர். ஜே. கே அவரது 12 வயதுக்குப் பின்னர், வாழ்க்கையின் எந்த நெருக்கடியையும் சந்தித்தவராகத் தெரியவில்லை. பிச்சை எடுத்தாயினும் உண்மையைக் காண வேண்டும் என்று அலைந்த விவேகானந்தரை மனக்கண்முன் கொண்டு வரும்போது, உண்மையைத் தேடி அவர் செய்த சாதனைகளைப் பார்க்கும்போது ... ஜே கே. இற்கு அந்தக் கஷ்டம் ஒன்றும் இருக்கவில்லை. அவரது 'விழிப்புணர்வு' எதுவித முயற்சியுமல்லாமல் தானுக வருவது போலவே, அவரிடம் குதிர்ந்திருக்கிறது.

3. ஜே.கே.யை ஆயர் சாள்ஸ் லெட் பீற்றரின் முன்மொழியின்படி 'அவதாரமாக்க' தேவதூதராக்க (Messiah) அன்னி பெசந்து அம்மையாரும், பிரம்ம ஞான சங்க உறுப்பினர்களும் கடுமையாக முயன்றிருக்கின்றனர் இந்த முயற்சியே 'முயற்சி செய்யாமை' என்ற கோட்பாட்டையும், குரு சிஷ்ய மரபின் மேல் கடும் வெறுப்பையும், ஒழுக்கக்கட்டுப்பாடுகளின் மேல் ஒருவித நிராகரிப்பையும் கொண்டு வந்திருக்கிறது என்று கருத இடமுண்டு.

4. மேலும் அவருக்குக் கிடைத்த 'குருக்கள்' பொய்யர்களாகவே இருந்திருக்கின்றனர். அவரது 16 ஆவது வயதில் அவரை வற்புறுத்தி அவர் கையாலேயே "குருவின் திருவடியில்" என்ற நூல் எழுதுவிக்கப்பட்டிருக்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது ஜே. கே. பல்வேறு நிர்ப்பந்தங்களுக்கும் திணிப்புகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. அதுவே பின்னர், அவர் வெளிப்படுத்தும் சமயங்களுக்கெதிரான மனநிலையை அவரிடம் கொண்டுவந்திருக்கலாம்.

5. அவர் பிறப்பால் இந்தியராக இருந்தும் இந்திய ஆத்மீக மரபிலிருந்து பெருமளவு துண்டிக்கப்பட்டிருக்கிருர் போலவே தெரிகிறது இங்கிலாந்திலும் சோபோனிலுமே அவருக்குக் கல்வி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே மேற்கின் பகுத்தறிவுப் (Intellectual) பின்னணி அவர் தத்துவப் போக்கை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கைச் செலுத்தியிருக்கலாம். அவர்காட்டும் விழிப்புணர்வு விளக்கங்கள் அந்தவாறே எம்மை எண்ண வைக்கின்றன 'குரு' வை ஏற்றுக்கொள்ளாமை, ஒழுக்கக்கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமை என்பவற்றின் தோற்றுவாயாக இந்த மேற்கத்தையப் பின்னணியையும் பொருத்திப் பார்க்கலாம்.

6. ஜே. கே. ஒரு இந்தியராக இருப்பதாலும், அவரைச் சார்ந்தோர் இந்தியாவோடு — இந்திய ஆத்மீக மரபோடு. தொடர்புடையவர்களாக இருந்தமையாலும் ஜே கே. காட்டும் 'விழிப்புணர்வு' இந்தியத் தத்துவஞானச் 'சாயல்' ஏறியதாகவே இருக்கிறது. அந்த வகையில் அவர் இந்திய ஆத்மீக மரபின் வாரிசுதான். ஆனுல், அவரது அரைகுறை இந்தியத் தன்மையால் அதனைப் பூரணமாக விளங்கிக் கொள்ளவும் வெளிப்படுத்தவும் முடியாதுபோயிற்று. எனினும் ஜே. கே. யை கொஞ்சமாவது விளங்கிக்கொள்ள இந்த இந்தியப் பின்னணிதான் உதவுகிறது.

7. ஜே.கே. ஒரு போலி அல்ல. ஒரு வயதுவரை அவரது 'குருக்கள்' இவரை தேவதூதராக ஆக்க முனைந்து நின்ற போதும், தான் ஒரு தேவதூதன் அல்ல என்று அவர் உணர்ந்து கொண்டபோது, அதனை நேர்மையாகவே ஒப்புக்கொண்டிருக்கிறார். அவரளவில் அவர் பேசும் அனுபவங்கள் உண்மையானவைதான். ஆனுல் அவை பெருமளவு ஆத்மீக சாதகனுக்கு உதவப் போவதில்லை. காரணம், அவரே சொல்லுகிற மாதிரி அவர் ஒரு வழிகாட்டியல்ல. 'குரு' அல்ல. மேலும் மேடைப் பேச்சுகளும், சாதனையற்ற மேற்கத்தைய போக்குடைய அணுகு முறைகளும் ஒருவனை அவனது இறுகிய 'பற்றுக்களிலிருந்து'ம், 'குணங்களிலிருந்தும்' விடுபடுத்தா. அவற்றிற்கு முதலில் தீவிர முனைப்போடு உந்தித் தளளும் ஆத்மீக வேட்கை கிளர்ந்தெழ வேண்டும். அது ஒன்றே கண்ணுய், மற்ற எல்லாவற்றையும் 'உண்மைக்காக' இழக்கத் தயாரான முயற்சி வேண்டும் 'சும்மா" இருக்கிற விடுதலை சும்மா இருக்க வராது. தூய்மையான உள்ளத்தோடு கூடிய தீவிர நாட்டமும், கடும சாதனையும் வேண்டும்.

8. ஜே.கே. தனது கருத்துரை முழுவதிலும் மனத்துக்குள்ளிருந்து மனம் கடந்த நிலையைப் பற்றிச் சொல்வது, அதையடைய முயல்வது சாத்தியமற்றது என்ற கருத்தை வெவ்வேறு வகையில் விளக்குகிருர்.

ஒரு கருத்தை அல்லது ஒரு இலட்சியத்தை வரித்துக் கொண்டால் மனம் அதை உறுதியாகப் பற்றி அதனையே அது அடைய முயலும் முயற்சி பயனைத் தரலாம். ஆனுல் அது விடுதலையாக இருக்காது. நாம் ஆரம்பத்தில் வரித்துக் கொண்ட 'கருத்துருவம்' அல்லது 'இலட்சியம்' இறுதியில் விடுதலைபோல எமக்குத் தோற்றங்காட்டும் அவ்வளவுதான். எனவே, உண்மையை முயற்சியாலோ, சாதனையாலோ அல்லது வேறெந்த வழிமுறையிலோ உணரமுடியாது—அறிய முடியாது.

இது சரியா?

(அடுத்த இதழில் முடிவுறும்)

படிப்பகம்

www.padippakam.com



## மெய்ச் சுடர்

உள்ளுருகிக் கிடந்த பொருள்
ஊதுவத்தி அல்ல
உணர்வின் திரட்சி.

நின்றெரிந்த தீபம்
வெறும் நெய்ச்சுடர் அல்ல
மெயச் சுடர்

மெய்ச் சுடரை
உன்னுள்ளும் ஏற்றிவை.
பொத்தி வைக்க அல்ல—
பொய்மை இருள் கடிந்து இருட்
புலம் சுடர்த்திவைக்கும்
சூர்யமாய்ப் பொலிய.

— சு. வி.

## ஒரு மாலையும் நானும்

வானம் இருளடைந்து
காற்று பலமாய் வீசும் இந்த மாலையில்
நான் பெருக்கெடுக்கிறேன்
நான் நிம்மதி இழக்கிறேன்
துயரில் நெஞ்சு கசிகிறது
காரணம் புரியாமல்
அடிவயிற்றில் கத்திகள் பாய்கின்றன

மேகங்கள் பறவைகள்
மரங்கள் மனிதர்கள் எல்லாமும்
தீராத துயரில் அசைகின்றன
மௌனமாய் அழுகின்றன

உலகே ஓர் கீதம்
துயர கீதம்
அழகான துயர கீதம்
வாழ்க்கை ஒரு சுகமான துயரம்
மரண இருள் வானத்து மின்னல்

என்னை அர்ப்பணிக்கிறேன்......
காலமே நீ பிசை
நீ பிசைகையில் உண்டாகும்
துயரோ இன்பமோ வலியோ பாடலோ
அதுதான் உண்மை
அதை நான் ஏற்கிறேன்
அதை நான் போற்றுகிறேன்

இந்த மாலையில் இப்படியானேன்......
சொல்ல எடுத்து
மறந்து போன ஏதோ ஒன்ருய்
வாழ்வின் துயரெனை
வருத்தும் படியாய்.

— வாசுதேவன்

## தாய்மை

மலர்ந்த தளிர்கள்
மரத்தில்
பழுத்த இலைகள்
மண்ணில்

தளிர்களின்
செழிப்பிற்காய்த் தானே
இளைத்து விழுகின்றன
பழுத்த இலைகள்!

எதிரே
மரத்தைப் பார்த்திருந்த
என்னுள்
ஏதோ ஒன்று
திரும்பிப் பார்க்க வைக்கிறது
அம்மாவை.

— எஸ். பி. சிவனேஷ்.

# சிற்பக் கலைஞர் விஸ்ணுவின் கலா தரிசனம்

அண்மைக் காலமாக, நாடு குழம்பியிருந்த போதிலும் — யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் இப்பொழுது கலை — இலக்கிய முயற்சிகள் பல, அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. என்போன்ற 'கழக வேலிக்கு' அப்பாலிருக்கும் ஆர்வலர்களுக்கும் சுவைஞர்களுக்கும் அந்நிகழ்வுகள் முழுமையாகக் கிடைக்க வாய்ப்பில்லை. இதற்கு, நாம் 'VIP' களாக இல்லாதது ஒரு காரணமாக இருக்கலாம். இருந்த போதிலும், பத்திரிகைச் செய்தி கொண்டு — அவற்றில் ஒன்றிரண்டைப் பணங்கொடுத்துப் பார்க்க வாய்ப்புக் கிடைக்கிறது. அந்த வகையில் கடந்த 09.09. 89 இல் யாழ். பல்கலைக்கழகக் கலை வட்டத்தின் அநுசரணையில் மரச் சிற்பக் கலைஞர், திரு. ஐயாத்துரை விஸ்வலிங்கம் அவர்களின் சிற்பக் கண்காட்சி ஒன்றைக் காணும், வாய்ப்புக் கிடைத்தது.

இக்காட்சி, யாழ். மண்ணுக்கு ஒரு புதிய காட்சி. யாழ். பல்கலைக் கழகத்துக்கும் இதுவே முதற் காட்சி. It is better, not too late – என்ற வகையில், காலந் தாழ்ந்தாயினும்– இப்பொழுதாவது எமது கண்களுக்கு விருந்தளித்த மேற்குறித்த கலை வட்டத்தை முதற்கண் வாழ்த்துவோம் — பாராட்டுவோம்.

இதே வேளையில். இவ்வட்டத்தின் கவனத்துக்கும் சில குறிப்புகளை இங்கு குறித்து வைப்போம். காட்சி அமைப்பு — ஒழுங்கமைப்பு பற்றிய விடயத்தில், 'யாழ்ப்பாணத்தான்' எப்பொழுதும் மிகவும் 'கஞ்சன்' தான்! எதற்கெடுத்தாலும், 'சூழ்நிலைசரியில்லை', 'நெருக்கடி நிலை' என்று கூறித் தப்பித்துக் கொள்வதற்கு இப்பொழுது நிறையச் சந்தர்ப்பம் இருக்கிறது. அந்த வகையில், இவ்வட்டமும், இவ்விடயத்தில் மிகவும் சரிந்தே நிற்கிறது. குறிப்பாக — மண்டப ஒழுங்கு, ஒளியமைப்பு, பார்வையாளர் தரிசன வசதி என்பவற்றுக்கு அமைப்பாளர்கள் கூடிய கவனஞ் செலுத்தியிருக்க வேண்டும். இதில், பொருள் எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு அதன் காட்சி அமைப்பும் மிகப் பிரதானமானது. அதற்கு உதவுமுகமாக எல்லாம் அமைய வேண்டும். இப்படியொரு காட்சிக்கு, 'வட்டம்' இப்பொழுதுதானே முகங் கொடுத்திருக்கிறது. அடுத்தடுத்த நிகழ்வுகளில், இது சீராகுமென எதிர்பார்ப்போம்.

அடுத்ததாக

கலைஞர் பற்றியும், அவர் பொருள்கள் பற்றியும் கூறுவதாயின் இங்கு பல விடயங்கள் உண்டு. விரிவஞ்சி, ஒருசிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விழைகிறேன். இக்குறிப்பு எனது சுய தரிசனம். எனவே என் சுவையும், எதிர்பார்ப்பும், கருத்தும் என் சுயம்பில் அடக்கம்.

மரச் சிற்பம் — தமிழருக்கு புதுமையான ஒன்றல்ல. பண்டு தொட்டு இன்று வரை வளர்க்கப்பட்டும், பேணப்பட்டும் வரும் தமிழ்க் கலைகளில் இதுவுமொன்று. குறிப்பாக — சைவாலயக் கதவுகள் முதல் தேர்கள் வரை இதன் பரிணமிப்புகள் இருந்து வருகின்றன. இதனை, மரபுவழியின் திட்ப— நுட்பங்களோடு சாஸ்த்ரீய முறையில் எமது தச்சர் குழாம் செய்து வருகிறது. இடைக்காலத்தில் போர்த்துக்கீசரின் வருகையால் இந் நாட்டில் ஐரோப்பிய மரச்சிற்பச் சாயல் படிந்தது. ஆயினும், யாழ்ப்பாணத்து மரப்பெட்டகம் முதல் தைலாப்பெட்டி, கதவு, கதவுநிலை, இருக்கை ஆசனம், படுக்கைப் பலகை, கத்திப் பிடி வரை எமது தமிழ்க் கலையம்சம் இழையோ



டியது. இருப்பினும், இங்கு— இது ஒரு சாதித் தொழிலாக ஒடுங்கி இருந்தமையால், எமது கலைஞர்கள் இதிற் புதுமை நோக்கில் சிந்திக்கவோ — செயற்படவோ இல்லை. அதன் காரணமாக, இக்கலை — மரபில் மூழ்கி, குடத்தில் இட்ட விளக்காகி விட்டது.

**அநு. வை. நாகராஜன்**

நவீன பரிமாணங்களில் இன்றைய கலைகள் யாவும் அணுகப்பட்டும், பரிசீலிக்கப்பட்டும் வருவதால் அவையனைத்தும் புத்தாக்கமும் புதுநோக்குங் கொண்டு, புதுக் கணிப்பீட்டுக்கு உள்ளாகி வருகின்றன. அந்த வகையில், கலைஞர் 'விஸ்ணு'வின் படைப்புகள் இங்கு தரிசிக்கப்படுகின்றன.

19்0 களில் பரிணமித்த இச் சிற்பக் கலைஞர், கடந்த நாற்பது ஆண்டுகளாக — தனது 'சுய கலை' ப் பாதையில் தனியாகவும் அதே வேளையில், எதுவித சலசலப்புமின்றி அமைதியாகவும் நடந்து வருகிறார். இவரைப் பற்றி இங்கு பலருக்கு அதிகந் தெரியாது. ஆனால், இவர் கண்டியில் சிங்கள ஆர்வலர் மத்தியிலும், சுற்றுலாப் பயணிகள் பார்வையிலும் நிறைந்து நிற்பவர். ஐந்தடிக்குள் உள்ள உயரவுருவம்; குழந்தைத் தோற்றம்; இருண்ட நிறப் பொலிவு; முதுமையில் இளமைக் கனிவு. ஆயினும். 'விஸ்ணு'வின் தீட்சண்யமான கண்கள் — கொழுத்த மூக்கு — தடித்த வாயிதழ்கள்—வைராக்கியத்துக்கு உரிய 'லெனின்' தாடி என்பன கலையார்வலர்களை மட்டுமின்றி எவரையுங் கவரவல்லன.

இப்பெரு சால்புடைய 'விஸ்ணு', இக் காட்சியில் முப்பத்தொரு தலைப்புகளில் தன்னுடைய மரச் சிற்பங்களைக் காட்சிப் படுத்தியிருந்தார். இவற்றுள் ஐந்து தெய்வ உருவங்கள்; ஏனையவை யாவும் மனிதவுணர்வுகளின் மெய்ப்பாட்டு உருவங்கள். நாணம்– சோகம் – பற்று – சிந்தனை – இளமை – முதுமை – தளர்ச்சி– வெறுப்பு – எதிர்பார்ப்பு - ஒய்யாரம் - உவகை எனும் பல்வேறு 'ரசபாவக் கோலங்களும்' ; துடியாட்டம் — காவடியாட்டம் போன்ற செயற்பாட்டுக் கோலங்களும் இங்கிருந்தன. இவற்றுடன், பெண் – தோழி – சகுந்தலை – முகங்கள் என்றும் சில தனித்துவ உருவங்களும் இருந்தன. இவற்றுள், சில தலைப்புக்கும் பொருளுக்கும் பொருத்தங் காணப்படவில்லை. (எடுத்துக்காட்டு: சகுந்தலை) ஆயினும், கலைஞரின் கைவினைகள் என்போன்றோருக்குப் பல அக – புறப் பொருள்களோடு உண்மைகள் பேசின.

இச் சிற்பங்கள் யாவும், பொதுப் பார்வையில்—ஒரே வடிவ—சாயலமைப்பில்— முரணிலாப் பொலிவில் இருக்கின்றன. எந்தவித கடின—ஆழமான அழுத்தத்துக்கும் ஆளாகாமல், மிகவும் சாதாரணமாக இருக்கின்றன. குறிப்பாக—முகவுருக்கள் யாவும் ஒரே சீரில்-தடித்த வாயிதழ்கள்–கொழுத்த மூக்குகள்– நீண்டு பிதுங்கிய கண்கள் கொண்டவையாக இருக்கின்றன. இவற்றுள், இங்கு 'விஸ்ணு' வின் எண்ணக் கருக் கோலம் எதுவென்று தீர்மானிக்க முடியாத ஒருவகைப் பாணி இருப்பதைக் காணக் கூடியதாகவிருக்கிறது. இவர் மரபுப்பாணியரா அல்லது நவீனப் பாணியரா எனக் கூற முடியாத ஒரு திணறல் எனக்கு இங்கு ஏற்படுகிறது. இவர் சிற்பங்கள் இரண்டுங் கலந்த ஒரு கலப்பினமாக (cross-breed) எனக்குப்படுகிறது. ஒரு நோக்கில் பார்த்தால், இவரது பாணி ஒரு வகை அர்த்த அரூபமாக (Semi abstract) வே எனக்குத் தோன்றுகிறது. சில சிற்பங்களில், மரபுவழியான தன்மையும் சிலவற்றில் சிதைப்புக் கொள்கையை (Distoration theory) யும் இவர் அநுசரித்து தனது

(11ஆம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



திசை
THISAI

சிறுகதைப் போட்டி
ஆறுதல்பரிசுக்கதை
— 1 —

# நான் - வட்டச் சுவருள் முட்டும் குருடன்

இரிஷி ப்ரபஞ்ஷன்

அவர்கள் புருவம் சுழித்து கண் சுருங்கி, இடக்கன்னம் (அல்லது வலக்கன்னம்) மேற்நூக்கி, கொடுப்புக்குள் (கண்டி இரவுக் குளிரின் அல்லது பகல் வெய்யிலின் விசித்திர விளைவுகளை எண்ணி) சிரித்ததொன்றும் எனக்கு அதிசயமாகப் படவில்லை. பின்னே, சிரிக்க மாட்டார்களா, என்ன? கண்டி நகர்ப்புறத்துக்கு வெளியே, மேல்நாகரீகமும் கொஞ்சம் கீழையப் பண்பாடும் கொஞ்சம் என்று குழப்ப முற்றுத் திரியும் எங்களைப் போல், நகரமா கிராமமா என்று குழம்புண்ட ஒரு பிரதேசத்தில், தமிழ், முஸ்லிம் மக்களால் (வீட்டில்) மட்டுமே பேசப்படும் ஓரேயொரு பேருந்து மட்டுமே சேவையிலீடுபடுத்தப்பட்ட 'கம'வொன்றின் ஒரு 'குச்சில்' 12m× 10m×8m அறை (?) யொன்றில் (தூசு+நுளம்பு+எலி+கரப்பொத்தான்+கனவுகள் & நினைவுகள் சகிதம்) வாழும் மூன்று தமிழ் இளைஞர்களில் ஒருவன், 'தவல' உம் 'திவயின' உம் மட்டும் ஒழுங்காக வரும் வாசிகசாலை அல்லது அதன் பொறுப்பாளரின் வாசஸ்தலம் எனப்படும் ஓர் இருண்ட கண்டத்திலிருந்து, மூன்று நாட்களுக்கு முந்திய 'வீரகேசரி'யில் முற்றுக நம்பிக்கை வைத்து, தன்னூர் நிலைமை கண்டு, அறிக்கை கேட்டு, வேண்டுகோள்களின் உள்ளர்த்தம் புரிந்து, நெடில் மூச்சு விட்டு, மெலிதாய் முகட்டில் ஓடும் பல்லியையும் அதன் முன்னே போகும் (அதாவது, முன்னே உள்ளே போகப் போகும்) பெயர் தெரியாத உருண்டைப் பூச்சியையும் வெறித்து விரக்தியிற் (அப்படித்தான் இருக்கவேண்டும்) சிரித்தால், அவர்கள் புருவம் சுழித்து சிரிக்கமாட்டார்களா, என்ன? அவர்கள் பார்வையில், என் அந்நியத்தன்மை, காலம் – இஃது எண்பத்து நான்கு, ஐந்துகளில் இருந்திருந்தால், ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் ஏன்(எனக்கு?) அச்சத்தையுங் கூட எழுப்பியிருக்கும். ஆனல், இன்று எண்பத்தொன்பதின் முன்னரையின் பின்னரைத் தொடக்கம்; அதுவும் நான் ஒரு தமிழ் – பல்கலைக்கழக மாணவன் (–உணர்ந்து கொள்ளுங்கள்) என்று தெரிந்திருக்கும் போது (நான் மறந்த போதிலும்), அனுதாபத்தைத்தான் ஏற்படுத்தியிருக்கும் என்பது இரண்டாம் கருத்திற்கு உட்படுத்தத் தேவையற்ற ஒன்று.

மெலிதாய், சுற்றுமுற்றும் எல்லோர்க்கும் பொதுவாக ஒரு மென்னகையைத் (நீங்கள் அசட்டுச்சிரிப்பென்றும் கூறலாம்) தாராளமாய் வழங்கிவிட்டு, வெளியே நடந்து, பூங்கா என்று சொல்லப்படும் பொட்டல் வெளியின் குட்டி மரமொன்றின் (வாகை? இருக்காது, இது முருக்கம்பூப்போல, ஈச்சஞ்செம்பழம்போல, இரத்தச்சிவப்புக் கொத்துப் பூக்களும் மெல்லிய பச்சை இலைத் தொகுதிகளாய்க் கிளைகளும் ...... என்னவாய் இருக்கும்? Jungle Queen? தேவையில்லாத கேள்வி ..... என்றும் தேவையற்ற கேள்விகளுள் எனை ஆழ்த்தி, நிகழ்காலச் சுகங்களை இழக்கும் நான்) கீழ் Concrete இனுற் போடப்பட்ட இருக்கையின் காக எச்சங்களிடையே கவனமாக உட்கார்ந்து, வீழ்ந்திருந்த சிவப்புப் பூங்கொத்தொன்றை உதிர்க்கும் பணியெ இச்சையின்றியியங்கும் செயற்பாடாகக் கைகள் செவ்வனே செய்ய, "நான் யார்? நான் என்ன இனிச் செய்யவேண்டும்?"

நிச்சயமாக, செல்லத்துரை சுகுணன், தமிழன், 5'9" (எத்தனை கிலோ?), அறுபத்தி ஆறில் வட கிழக்கில் 'இந்த இடத்தில்' ஜனனம், எண்பத்தொன்றில் க. பொ. த. (சாதா) சித்தி (– கட்டைக்காற் சட்டை), எண்பத்துநான்கில் பல்கலைக்கழக அனுமதி, எண்பத்தி ஏழின் பிற்பகுதிகளிலிருந்து தாடி, 'காரா', 'St Peter's', 'Store wash' இவை; இந்தப் பௌதீக, திணிவு, நீளம், (சிலவேளைகளில் அதிரும் அணுக்களால் ஆன அலை வடிவத்தின் வழியே மற்றவர்களினுல் உணரப்படும், நேரத்துடன் மாறுபடும்) அடிப்படைக் கணியங்களால் மட்டும் குறைந்தபட்சம் அறியப்படும் நான் மட்டுமல்ல அல்ல நான். அப்படியானல், எங்கிருந்து வந் ...... 'ட்டொஷ்'

"'Sorry, coins விழுந்திட்டுது". காசைப் பொறுக்கிக் கொண்டு பக்கத்து இருக்கையில் அமர்ந்தான் பெனடிக். ஆள் பற்றிய அடையாளங்கள் அவசியமற்றவை. என்னைப் பொறுத்தவரை, என்னுடைய இன்றைய (குழம்பிய அல்லது குழப்பிய) மனேநிலையின்படி, அவனும் என்னைப்போல, உங்களைப் போல, உங்களருகே இருப்பவர் போல, சுகுமார் போல, பட்டென்று வெடித்தென்றே சட்டென்று போகப் போகும் உயிர்க்குமிழி ஒன்று போட்டிருக்கும் ஒரு சட்டைதான்; மாரீசமான். இன்றைய என்னைப்போலவே வாழ்க்கைத் தத்துவ விசாரத்திற்கும் நாட்களை இவ்வுலகிற் கடத்துவதற்குமான நம்பிக்கைப் பிடிப்புகளுக்குமாய் சில காலங்களுக்கு முன்னிருந்தே உள்மனயாத்திரை போய்க்கொண்டிருப்பவன்.

எதையும் தானுய்க் கேட்கமாட்டான் என்பதால், "வழமையான பிரச்சினைதான்" – சொன்னவன் நான். சிரித்தான்— தூங்கும் நெடிய May flower மரமொன்றின் ஊதாப் பூக்கள் உதிர்ந்து சுழன்று சுழன்று கீழ் விழுவது போற் சுகமாய். "உதுக்குத்தான் நானும் உனக்குச் சொல்லுறன். நான் ஆர் எண்டு தேட வேண்டிய காலம் ஒண்டு இருக்கு. ஒத்துக் கொள்றன். ஆனு, அது இதில்லை. இப்ப நீ யோசிக்க வேண்டியது உன்ரை நிலைப்பாட்டை, உலகார்ந்த ரீதியா என்னெண்டு. விதியோ, கர்மாவோ என்ன காரணமோ, அது வேறவிசயம். நாங்கள் இப்ப இந்த உலகத்தின்ர ஏதோ ஒருவகை Machinary routine இற்குள் feed பண்ணுப்பட்டிட்டம். அதில எங்கட காலம் முடியிறவரை சூழ்நிலைகளால் வருகிற பிரச்சனைகளை, 'stress' சுக்ளைக் குறைத்து, இயலுமானவரை மற்றவனைப் பாதிக்காமல், ஏலுமெண்டால் அவனுக்கும் நல்லதைச் செய்து போட்டு ஒரு வகை நிம்மதியோட சாகிறதுதான் வாழ்க்கை"–நிறுத்திச் சொன்ஞன் – "இது என்ரை இண்டையக் கொள்கை ...... ம்ம்ம் ...... ஓம், கொள்கை எண்டு சொல்லலாம். ஆனு, இதில நரனும் எவ்வளவு உறுதியா இருப்பன் எண்டு சொல்லேலா. ஆனு, தொடர்ந்து எனக்குள்ள யோசிக்கேக்க எனக்குப்படுறது இதுதான். நான் உனக்கு இதுதான் தீர்வெண்டு எதையுஞ் சொல்லேலா. ஆனு, நீ உனக்கான தீர்வைக் காண நான் சொல்கிற கருத்துகளையும் முன்னெடுக்கலாம்"; மௌனம்.

எனக்குட் சினம் முகிழ்த்தது; என்ன மனிதன் இவன்? தெளிவின்றிப் பேசுவதையே, போதிப்பதையே, தன் திறமையாகக் காட்டப் பார்க்கிறுன்; உள்ளதையும் குழப்பப் பார்க்கின்றுன்; என்னுள் ஏற்படும் மோதல்களையும் முரண்பாடுகளையும் ஏன் இவனுற் புரிந்து கொள்ளமுடியவில்லை? எனக்கான சிக்கல்களும் பிரச்சனைகளும் இவனுக்கும் ஏறக்குறைய அதே சூழ்நிலைகளின் கீழ் ஏற்பட்டவை தானே.

நான் 'தீவிர இந்துவாய்ப்' பிறக்க, இவன் 'தீவிர வேதக்காரனுய்ப்' பிறந்தான் என்பது தவிர (இப்போது, இருவரும் தம் பரம்பரை நம்பிக்கைகளிலிருந்து வெளியே சென்று பலகாலம்), மற்றப்படி அவனும் இன உணர்வூடே சென்று, பொருளாதார ரீதியாக நடுத்தரவர்க்கக் குடும்பமொன்றின் வளர்ச்சிக்கான சகலவித அரசியற் திட்டங்களையும் கொள்கைகளையும் ஆராய்ந்து மார்க்ஸீயம் அஃது, இஃது என்றெல்லாம் அலசி, நாட்டின் விடுதலைக்காய் என்ன செய்யவேண்டும் என்று விவாதித்து (கவனியுங்கள், ஆக விவாதிக்க மட்டுமே செய்தோம்), பின் எல்லாம் பொய்யாகிப் போதல் கண்டு, ஆத்மீக வெளிநிரப்ப ஜே. கிருஷ்ணமூர்த்தி (எனக்குச் சத்தியமாக இவர் பற்றி விளக்கம் அதிகமில்லை), 'ஸென் பௌத்தம்' நோக்கி, இறுதியாக இன்று இப்படி கேள்விக் குறியாக ஆகியிருக்கிறுன். பிறகும் ஏன் இப்படி விளக்கமின்றிப் பேசுகிறுன்? ஒரு விதத்திற் பார்த்தால் அவன் சொன்னது சரிதான். எனக்கான தீர்வை இவனெப்படி காட்டமுடியும்? இனி எனக்காக நானே கேள்வியை முற்போட்டு நான் அறிந்தவை கொண்டு, மூன்ரும் மனிதனுக நின்று அதற்கான விடையை எனக்குள் இருந்து சுகுணஞை நானே விடுத்தலன்றி (ஏனெனில், என் தீர்வுகள் மட்டுமே எனக்குள் எழும் மனச்சாட்சிப் பிரச்சனைகளைத் தாக்காட்டக் கூடியதாகவும் (சப்பைக்கட்டு?) அதேநேரத்தில் சமூகக் கட்டுப்பாட்டையும் இயலுமானவரை மீருமல் எனக்கான வினுக்களை விடுவிக்கவியலும்) வேறெவரையும் நாடப்போவதில்லை.

தனது ஆற்றுமைகளையே தன் கொள்கைகளாக, வாழ்க்கைத தத்துவமாக ஏற்க நினைக்கும் (அப்படித்தான் இருக்கவேண்டும் — இப்படி எண்ணுதலும் ஓர் ஆற்றுமையோ? ஐயோ! எந்தத் தளத்தை, எனக்காக நின்று யோசிக்கப் பெறப்போகிறேன்?) என்னுடைய இன்றைய சிக்கல் என்ன? அவனவன் மொழி, நாடு என்ற உணர்வுகளோடு போராடுகையில் (இதே ஒருசிக்கல், 'போராடும்போது' என்று கருத்துருவம் அமைப்பதா, இல்லை 'போராடியபோது' என்று உருவமைப்பதா என்று) நான் ஒன்றும் செய்யாமல் விலகி வேடிக்கை பார்ப்பவனுக, அஞ்சி (வெளிநாடு ஓடாவிட்டாலும் வீட்டாரையும் படிப்பையுஞ் சாட்டி) இங்கு வந்து நின்றுகொண்டு மானிட



நேரம் போவது? (மனச் சாந்திக்காகவா? இல்லை உண்மையாகவேயா? எனக்கே புரியவில்லை) ஆனல், எந்த ஒரு தனிமனிதனையும் எந்தவொரு அமைப்பையும் அவர்களின் செயற்பாடுகள், சிந்தனைத் தளங்கள் எவையாகினும், முடிந்தவரை அவற்றை இலகுவாக, தவருக விமர்சித்து, அவர்களின் நடவடிக்கைகள் எப்படி இருக்கவேண்டுமென்று இன்னேரன்ன கொள்கை வழிகள், மேற்கோள்கள் முன்வைத்து, அர்த்தமற்ற விவாதங்கள் நடாத்தி, என் அறிவு (தவறு; 'தகவற் குப்பைகள்' சரியான பதமென்று நினைக்கிறேன்) உயர்ந்தது, திருத்தமானது என்று சுற்றியுள்ளோரை நினைக்கவைத்து, அன்றைய சோக்கிரட்டீஸின் கடன் சேவல் முதல் இன்றைய 'உவிற்றனின்', 'string theory' வரை நுனிப்புல் மேய்ந்து, ஆனுல் எல்லாம் தெரிந்தவன் போல, உறுப்புறுப்பாய் அலசி, தனிமையிற் பல சமயங்களிற் தாழ்வுச் சிக்கலுற்று, இறுதியாக, சுகுமார் சொல்வது போலவோ என்னவோ, பிரச்சனைகட்கு முகங்கொடுக்க முடியாமல் என் திருப்தியையும் கெடுக்காதவாறு என்றுமே (குறைந்தபட்சம் என் ஆயுட்காலம்வரை) நிறைவேற முடியாத உயர்கொள்கைகள் கொண்ட 'Utopian aristocracy'; ன் கற்பனை உயருலகில் என்னையும் இணைத்து (புதைத்து என்பதும் சரி), 'நெருப்புக் கோழி மனப்பாங்கில்' என்னையோ என்னைச் சுற்றியுள்ளவர்களையோ எந்தப் பிரச்சனையும் அணுக முடியாது, இப்போதும் இல்லை என்ற தப்பிக்கும் சமாதானத்துடன் வாழ்கின் .........

"போவமே?" பெனடிக் பின்புறத்தைத் தட்டியபடி எழுந்து கேட்டான். மௌனத்தில் தலைபுகுத்தி, இருபக்க காற்சட்டைப் பைகளுள்ளும் கைகள் நுழைத்து மெல்லடி நான் வைக்கையிலே, முன்னே அ(ச்)சாதாரண நீலக்கண்கள் ஒரு வெட்டுவெட்ட (எனைநோக்கி — என் கருத்து; பின், நான் நோக்குங்கால் நிலம்நோக்கி ...... என்று திருவள்ளுவரின் குறளாய் என் கற்பனை விரியலாம்) அவள் கடந்தாள். மனம் தொலைதூரப்பயணம் செய்யும் பேருந்தொன்றில் சிறிதுநேரம் நன்கு ஒட்டி, பின் இடையிற் பிரியும் பெயரறியா சிறுகுழந்தையைப் பிரிந்த நிலையினிலே ஏக்கமாய்ப் பெருமூச்செறிந்து, கனத்து, —'பெண்' ஒன்று இன்று பெரு மின்னலாய், என் பிரச்சனைகட்கு இஃது ஒரு தீர்வாய் அமையுமென்றே? — ஆராய்ந்தது; பெனடிக் கனைத்தான். இவன் என்ன சொல்லப் போகிறுன்?

(11ஆம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## நான்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவேன்நான். ''காட்டு வெள்ளத்திற், கரைதேடும் ஒருவன் கட்டுவிரியனைக் கூடக் கைக்கு ஆதாரங்கொள்ளலாம்; அதனால், மெதுவாய், உன்நேரமெடுத்து யோசி''. வேறொரு பக்கம் இன்னோர் உணர்வு. எதிர்கால கொள்கைகட்காய், வாழ்விற்காக இன்றும் நாளையும் யோசிக்க நேரத்தை ஒதுக்கிக்கொண்டே போனால், அந்த எதிர்காலத்திலும் இதைத்தான் யோசிப்பேன். இன்றைய நிச்சயமான பொழுதை இப்படிக் கழித்து நிச்சயமற்ற எதிர்காலத் திட்டங்களுக்காகவே என் நாட்களை வீணாக்கி, ......, எதற்காக நான் இவற்றை யோசிக்கின்றேன்? பொழுதுபோக்கிற்காகவா? இல்லை என் மூளைக்கு ஓர் 'Intellectual exercise' இற்காகவா அல்லது என் செயற்பாடுகளை இம் முடிவுகளிலிருந்து நடத்திச் செல்வதற்காகவா?

தலைகுழம்பியது. எங்காவது யாருமற்ற ஒரு இடத்தில் கழுத்தளவு நீரில் (கடல்நீர் நல்லது, நான் சைவ உணவுக்காரன், அயடீன் உறிஞ்சிக் கொள்ள) நின்று 'ஓ' என்று உரத்து ஓலமிடவேண்டுமென்றோர் உணர்வு. அறையில் வந்து உடுப்புகளை மாற்றாமலே கட்டிலில் விழுந்தேன். எதிரே வெளிச்சுவரில் இரண்டு கிழமைகட்குமுன் ஆழ்நிலைத்தியானம், யோகாசனத்தோடு உற்று நோக்கலுக்காக, கண்சக்தியை அதிகரிப்பதற்குச் சுவரிலிட்ட கறுத்தப்புள்ளி (ஒரு கிழமைக்கு முன்னரே காலை எழுகின்ற அலுப்பினால் கைவிடப்பட்ட திட்டம்) என்ன செய்வது? மனத்தின் மாறுதல் விளைவிக்கும் குணம்; மனிதநேயம் நல்லதொரு கொள்கைதான். ஆனால், அதில் நடைமுறைச்சிக்கல்கள் உண்டு. அதையும் சமவுடைமைத்தத்துவத்தையும் ஆன்மீகத்தையும் இவ்வளவிற்கு இவ்வளவிற்கு இவ்வளவு என்று கலந்து ஒரு 'புதுக்கொள்கை' எனக்காய் உருவாக்கி, (ஆற்றாமைகளின் விளைவோ எனும் சந்தேகம் மீண்டும் என்னுள்) நடைமுறைக்கேற்ப வளைந்து அவ்வப்போது, அதையதையே உபகொள்கைகள் ஆகவும் மூலக்கொள்கைகளின் வருவிப்புகள் (Derivation) இற்கு 'தருவிப்பு', 'வருவிப்பு' எது சரியான தமிழ்ப்பதம்? ......... தேவையில்லாத பிரச்சினை சுகுணன், விஷயத்திற்கு வா) ஆகவும் கொண்டு இன்னும் சிலருக்கு அதையே அடிக்கடி கதையோடு கதையாக எடுத்துக்கூறி, என்னையொரு கொள்கைவழி நிற்பவனாகக்காட்டி (குறைந்தபட்சம் ஓர் அறிவுஜீவியாகவும் அதிகபட்சம், ஓர் ஆத்மீகக்குருவாகவும்), அதன் காரணமாகப் பிரச்சினைகளிலிருந்து தப்பிப்போகமுயலவோ? ஒருவேளை, அடிப்படைப்பிரச்சினையே மற்றவர்கள் என்னை ஒரு சிறப்புமிக்க 'உயர்' கொள்கைகள் (அதுதான் அவை எட்டமுடிவதில்லையோ?)கொண்ட உரிமைகட்காகப் போராடுபவன் என்று எண்ணவேண்டுமென்று நான் விரும்புவது தானோ?

கண்களை இறுக்கமூடி தலையை உலுப்பி, முகத்தை தலையணையுட் புகுத்தி, இருட்டுச், சுற்றுமதில் அமைத்துக் கொண்டேன் (வேண்டாம், என் பிரச்சினைக்கு வாருங்கள். தலையணையின் நிறமோ, அது தண்ணீர் கண்ட நாட்களோ அல்ல இன்றைய பிரச்சினை). எந்தப் பிரச்சினையை ஆராய்கையிலும் நான் விடும் தவறு இதுதானோ? பிரச்சினையையும் ஏதோவொரு தீர்வையும் வைத்துவிட்டு அந்தத் தீர்வைச் சரியாக்க (அல்லது பிறருக்குச் சரியெனக் காட்ட) தகுந்த காரணத்தைத் தேடுகிறேனோ? எந்த முடிவையும் சரியெனக் காட்ட எவ்வளவு காரணங்கள் உண்டோ அதேயளவு அல்லது அதைவிட அதிகமாக, அதைப் பிழையெனக் காட்டவும் காரணம் உண்டாமே? (யார் சொன்னார்? யாரோ ஒருவர் இன்னொரு யாரோவின் தீர்வைத் தான் மறுப்பதற்காய் இந்தக் காரணத்தைச் சொல்லியிருப்பார். (அப்பாடா, ஒருமாதிரி என் குழப்பத்தை உங்களுக்கும் தந்தாகிவிட்டாயிற்று. இனி, என் நிலைமை உங்களுக்கு நன்றாகப் புரிபடத் தொடங்கும்). இன்னொரு பக்கம் இவன் பெனடிக் சொல்கிறான்–பிரச்சினையின் காரணத்தை அறி; அதுவே பிரச்சினைக்குத் தீர்வு.

பல பிரச்சினைகள் என் முன்னே அதிகரிப்பதாய், யோசிக்க யோசிக்க கேள்விகளை இன்னும் அதிகமாய்ச் சொரிவதாய், இப்போது மொத்தத்தில் நான் என்ன செய்யட்டும்? ஓரளவு எச்சரிக்கையுள்ள தமிழ் இளைஞனாக, தமிழ் உணர்வுடன் ஒன்றிரண்டு உணர்ச்சிக் கவிதைகளையும் (திட்டமிட்ட குடியேற்றங்களை எதிர்த்தொன்று; மறைந்த போராளிகட்கு (எல்லோருக்கும் பொதுவாய்) அஞ்சலியாக இன்னொன்று) ஓரிரண்டு முற்போக்கான (?)கதைகளையும் (வெளிநாடுபோனோரை பல காரணங்கள் காட்டி (வயிற்றெரிச்சலுடன் திட்டி) துரோகிகளாக வெளிக்காட்டி ஒரு கதை; நான் என்ன காரணங்களுக்காக ஊரில் நின்று போராடாமல் இங்கு படிக்க வந்தேன் (அது வேறு, படிக்க வந்தேனேயொழிய, யார் போன ஒன்றரை வருடங்களாகப் படிக்க விட்டார்? **குறிப்பு: படிப்பதைத் தவிர அனைத்துக் கூத்துஞ் செய்தாகி விட்டது செல்லத்துரையரின் (என்தகப்பனார்தான்) காசில்) என்று விளக்கி கிட்டத்தட்ட மற்றவர்களுக்கு அறிக்கை போல இன்னொன்று) எழுதி விட்டு இங்கேயே என் எதிர்காலத்தை ஒளிமயமாக்க (என்னைப் படிப்பு முடிய என்ன விலைக்கு விற்கலாம்?) முற்படும் நோக்கில் இருக்கவா? இல்லை, இன்னும் சாதாரணமாகி, வெளிநாட்டிற்குப் போய், பண்பாட்டுக் குழப்பத்தோடும் பண நிறைவோடும் இருக்கவா? அதையும் விட்டு ஏதோவொரு போராளியியக்கத்துடன் ஊறிப்போராடவா? அதைக்கூட விட்டு,( பெரும்பாலான நேரங்களில் மனோதத்துவத்தோடு ஒத்துவரா) மனிதநேயம் பேசி, நமீபிய மக்களுக்குஆதரவும் எத்தியோப்பிய பட்டினிச்சாவிற்குக் கவலையும் 'சதி' உடன்கட்டையேறலுக்குக் கண்டனமும் 'Nato'–'Warsow' போராட்டங்களுக்கு, நட்சத்திரயுத்தங்களுக்கு, அணு ஆயுதங்களுக்கு எதிர்ப்புணர்வும் காட்டி, என் சூழலை மறக்கவா? இல்லை, எல்லாவற்றையுங் கலந்து (அல்லது கடந்து) மனிதநேயவெளிப்பாட்டில் எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்திப் பேசித் திருப்தி அடையவா? மேலாக இந்த குறுகிய கால அடைதல்களை (Short term goals) விடுத்து என்றோ வரப்போகும் (?) தேவனின் இராச்சியத்திற்காக, பிரபஞ்ச அறிவுடன் சங்கமமாக, முக்தியடைய, (அல்லது) முடிவான உண்மை தேடி, பரிநிர்வாணம் அடையவா? (அதாவது, செயலற்று உறங்குநிலைப்பருவம் அடைந்து மோனத்தவம் செய்யவா, நடப்பது எல்லாம் நன்மைக்கேயென்று?) தலையணையைக் குத்தினேன். தலையைச் சிலுப்பிக் கொண்டு, கால்களைக் கட்டிலிற் போட்டடித்துக் கொண்டேன். என்ன செய்ய? என்ன செய்ய? என்ன செய்ய?

சுகுமார் பெனடிக்கிற்குச் சொல்லிக் கொண்டிருந்தான்; ''மச்சான், சுகுணனும் வரவர உன்னைப்போல தானும் குழம்பி மற்றவர்களையும் குழப்ப வெளிக்கிட்டுட்டான். Campus கெதியில திறக்காட்டி, பாதிப்பேர் பைத்தியமாயும் அல்லது உன்ரை நோக்கில Enlightment அடைந்தவராயும் போயிடுவியள்.'' போச்சுடா, இவன் இது வேறு ஒரு கருத்தை ஊர் முழுக்க, பரப்ப வெளிக்கிட்டு விடுவான். இன்னொரு யோசிக்கவேண்டிய Short term goal பிரச்சினையைக் கிளப்பிவிட்டான். இல்லாவிட்டால், நான் ஏதோ ஒரு வகை 'இஸத்'தினூடே விளக்கம் கற்பிக்கப்படுபவனாக, என் செயல்கள் இக்கொள்கையூடே விளங்கப்படுவதாக ஆகி என்னைக் குறுக்கி, என் (இந்தளவாகினும் உள்ள) சுதந்திர நிலைப்பாட்டிற்கு அழிவூட்டி விடுவார்கள்.

இப்போது இதற்கு நான் என்ன செய்யட்டும்?

என்ன செய்ய?
என்ன செய்......
......Act without the mind of mine? □

## சிற்பக்...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைவண்ணத்தைக் கையாண்டிருக்கிறார் போலும். எடுத்துக்காட்டாக — 'முதுமை', 'ஆண்டி', 'பெரிய மீன்', 'பயணி' போன்ற சிற்பங்கள் ஒரே சீரான–எதுவித சிதைப்புமின்றி இருப்பதையும்; 'நாணம்', 'சோகம்', 'முகங்கள்' என்பவற்றில் ஓரளவு அரூப வெளிப்பாடுகள் மிளிர்வதையுங் காணலாம். 'துடியாட்டம்', 'காவடியாட்டம்' என்பனவற்றில் ஓரளவு சிதைப்பை ஊட்ட முனைந்த போதிலும் இவை முழுமையான அரூபமாகவோ — நவீனமாகவோ தோற்றம்பெறவில்லை. 'பெண்' உருவில், குறிப்பாக இடுப்புக்குக் கீழ் 'கியூபிஸம்' (Cubism) காணுகின்ற கண்களுக்கு அதன் இடுப்புக்கு மேல் றியலிஸம்' (Realism) மே பளிச்சிடுவதைக் காண முடிகிறது. இவை மூலம், 'விஸு' ஒரு சுயம்பு என்பதுவும்; இவர் தனக்குத் தானே ஒரு எல்லையை வகுத்து, அதற்குள் தனது வெளிப்பாடுகளை வடிக்கிறார் என்பதுவும் தெளிவாகிறது. இவரது படைப்புகளில் முக்கியமாக, காட்சிப் பதிவு (Visual impact), உணர்த்துஞ் செய்தி (deliverying message), அமைப்பெளிமை (simplicity in composition என எல்லாக் கலைகளுக்கும் உயிர் நாடியென விளங்கும் முப்பரிமாணப் பிரமாணங்கள் ஓரளவு தெளிவாக இருக்கின்றன. இவருடைய பாணியில் குறியீடுகள் (Symbolism) குறைவு. ஆதலால், பார்வையாளன் தன் சுய சிந்திப்புக்கு அதிக இடமில்லாது நிற்கிறான்.

'விஸு' இந்நாட்டின் ஒரு தேசியக் கலைஞராக இருந்தால் — இந்த 'மண்ணிலும்' அவருடைய தேடலும் பதிவுகளும் முகிழ்க்க வேண்டும். 'பெரிய மீன்' இல் தென்னிலங்கைப் பிறப்புகளைக் காண்பது போல், மயிலிட்டி–தாளையடிப் பிறவிகளையும் இனங்காட்ட வேண்டும். எமது மண்ணின் மணம் இவர் படைப்பிலும் மணக்க வேண்டும். இத்தேவை எமக்கு வேண்டியிருக்கிறது, இவரது கலைப்படைப்புகள் வெறுமனே கைவினைப் (Crafts) பொருள்கள் அல்ல; விலை மதிப்பில்லா இம் மண்ணின் படைப்புகளாக வேண்டும். இவை, இந்த மண்ணின் காலக் கண்ணாடிகளாகவும் இருக்க வேண்டும். இவர் தேடலில், இந்த மண்ணின் மணங்கமழ வேண்டும். இஃது, இம்மண்ணின் தேவையை ஒட்டிய ஒரு வேண்டுதலே அன்றி, 'அடித்தப்பம் ஊட்டும்' செயலின் வேண்டுகோள் அல்ல.

ஒட்டுமொத்தமாகக் கூறின்–யாழ். மண்ணின் கலாதரிசனத்துக்கு 'விஸு'வின் படைப்புகள் 'ஒரு விஸ்வ தரிசனம்' ஆக இல்லாவிடினும், அவை ஒரு முன்னோடி ஊக்கி (booster) யாக இருக்கின்றன என்பது உண்மை. இக் காட்சி, இளைய தலைமுறைக்கு ஓர் எடுகோளாக விளங்குகிறது. இவர் திறனும், ஆற்றலும் இந்த மண்ணின் வடிகால்களாக அமைய நிறுவன ரீதியான ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றியமையாது தேவைப்படுகின்றன. அவற்றை ஆர்வலர்களும், சுவைஞர்களும், நலன் விரும்பிகளும் அளிக்க முன்வரின், 'விஸு'வின் கலாதரிசனங்கள் போன்ற தரிசனங்கள் பயன் உடையவையாக அமையும். □

## அராபியத்தில்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமய வேறுபாடுகளுடனும் சமாதானமாகச் சேர்ந்து வாழ முடியும் என்ற, அரசியல் செய்தியினைச் சொல்லுவதாகவும் இருக்கிறது.''

இந்தியாவின் 'பூனே தொலைக்காட்சி, திரைப்படப் பயிற்சிக் கல்லூரி'யில் பயின்றவர்தான் இந்த 'காலெட் சித்திக்' என்பதும், குறிப்பிடத்தக்கதாகும். □

## பிழை திருத்தம்

இவ்விதழில் வெளியாகியுள்ள சிறுகதையை எழுதியவரின் பெயரினை அல் அஸுமத் எனத் திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

ZELLERS CHOCOLATE
ஏக விநியோகஸ்தர்களும்
தரமான தேயிலை
விற்பனையாளரும்
சரண்கா ஏஜென்சி
281, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Remington Tamil Typewriters
20'' and 27'' arrived.
Only Limited quantities available.
Imported and locally manufactured
Hand pumps
available for sales.
Agent for Gestetner Products
Samuel, Sons and Co. Ltd.,
Jaffna.

படிப்பகம்

www.padippakam.com



திசை

## திசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

### காந்தியம் என்றல் என்ன?

இம் மாதம் 2 ஆம் திகதி மகாத்மா காந்தியின் 120ஆவது பிறந்த தினம், எங்கும் பரவலாகக் கொண்டாடப் பட்டது.

காந்தியைப் போற்றிக் கொண்டாடுவது வேறு, அவரது கொள்கையைப் புரிந்து கொள்வது என்பது வேறு. இன்று காந்தியைப் போற்றுபவர்களும் சரி, அவரை எதிர்ப்பவர்களும் சரி, எவ்வளவு தூரம் காந்தியத்தைப் புரிந்து வைத்திருக்கிறர்கள் என்பதே கேள்வி.

காந்தியத்தை எதிர்ப்பவர்கள் எவ்வளவுதூரம் காந்தியத்தைப் புரிந்துகொள்ளவில்லேயோ, அவ்வாறே இன்று காந்தியைப் போற்றுபவர்கள் நிலேயும்.

காந்தியம் என்றல் என்ன? காந்தியம் என்டது, காந்தி என்னும் ஒரு தனிமனிதன் எவ்வாறு, இன்றைய நவீன கால சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சத்தியத்தை அழுத்துவதையும் அதன்மூலம் பணிக்கப்பட்ட அகிம்சைப் போராட்டத்தையும் கைக்கொண்டார் என்பதைக் காட்டுவதே.

காந்தியத்தின் முக்கியமான பண்பென்னவெனில், காந்தியத்தை அனுஷ்டிக்கும் ஒவ்வொருவரது அக வாழ்க்கையோடும் அது சம்பந்தப்படுவதே.

இதை மார்க்சியத்தோடு ஒப்பிடும்போது இலகுவாகப் புரிந்துகொள்ளலாம். மார்க்சியம் என்பது, கார்ல்மார்க்ஸ் என்னும் தனி மனிதன் தனது அகவாழ்க்கையில் கடைப்பிடித்தவற்ருேடு சம்பந்தம்கொள்வதல்ல. மாருக, அது சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கு மார்க்ஸ் முன்வைத்த சித்தாந்த வியாக்கியானங்களோடு மட்டுமே சம்பந்தம் கொள்வது.

ஆனல் காந்தியமோ, முதலில் ஒருவரது அகவாழ்க்கையைச் சுத்தப்படுத்துவதிலேயே ஆரம்பிக்கிறது. இந்தச் சுத்தப்படுத்தலே ஒருவர் தான் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினைகளின் தீர்வுக்குப் போராடுவதற்கு உத்தரவாதம் அளிக்கிறது. இதுவே காந்தியத்துக்கும் மார்க்சியத்துக்கும் உள்ள முக்கிய வித்தியாசம். இந்த வித்தியாசத்திலேயே இன்று பெரும் பெரும் மார்க்சியவாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்பவர்கள், தமது அகவாழ்க்கையில் கொழுத்த முதலாளித்துவப் போக்குடையவர்களாகவும், பிற்போக்குக் கொள்கைகளின் உறைவிடமாகவும் இருப்பதற்குரிய காரணத்தைக் காணலாம்.

ஆனல் இன்றைய காந்தியவாதிகளும், மார்க்சியவாதிகள்போல் வாயளவில் காந்தியம் கூறும் 'சத்தியாக்கிரகம்' 'அகிம்சை' என்னும் கோஷங்களை உதிர்க்கும் வெறும் வியாபாரிகளாகவே மாறியுள்ளனர். இவர்கள் கருத்தில் காந்தியம் என்பது, மரக்கறி சாப்பிடுவதும், கதர் உடுப்பதும், இயற்கை வைத்தியம் செய்வதும் என்பதாகிவிட்டது. இவை காந்தி என்னும் தனிமனிதன் தனது சத்திய சோதனையின் தேவைக்காக, தன்னளவில் கடைப்பிடித்த புற அனுஷ்டானங்களே. இவ்வனுஷ்டானங்கள் எல்லாருக்கும் ஒன்ருக இருக்கவேண்டும் என்பதல்ல. உண்மையில் எல்லாருக்கும் ஒன்ருக இருக்கவேண்டியது, அகமும் புறமும் உண்மையாய் இருத்தலும் இந்த உண்மையாய் இருத்தலுக்கு — சத்தியத்தோடு தன்னைத் தொடர்பு படுத்துவதற்கு — தேவைப்படும் கடும் பிரமச்சரிய விரதமுமே.

இவற்றை அறியாது 'காந்தியம்' பேசப்போனவர்களாலேயே காந்தியம் இன்று இங்கு செல்லாக்காசாகியுள்ளது. □

## புதிய பொதுத் தேர்தலுக்கு ஐ.தே.க. தயாரா?

ஜே. வி. பி. இனர் ஆயுதங்களைக் கீழே போட்டு தேர்தலில் பங்குகொள்ள முன்வருவார்களேயானல் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடாத்துமாறு தாம் ஜனதிபதிக்குச் சிபார்சு செய்வதாக ஐ. தே. க. செயற்குழு அறிவித்துள்ளது.

ஜே. வி. பி. நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கைஅற்றஒரு ஸ்தாபனம். நாடாளுமன்றப் பாதை பிழையானது என்பது அவர்களது விமர்சனம். நாடாளுமன்ற தேர்தல் மூலம் கடந்த காலங்களில் பல தோல்விகளை அவர்கள் தழுவியவர்கள். எனவே நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பைப் பெறுவதில் அதிக நம்பிக்கை அவர்களுக்கு இருக்காது. ஆதலினல் அவர்கள் ஆயுதங்களைக் கீழே போட்டு தேர்தல்களில் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்ப்பது கடினம்.

ஜே.வி.பி. இனரின் இம் மனநிலையை விளங்கிக் கொண்ட ஐ தே. க. இனர், எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு தாம் செவிசாய்ப்பதாகக்காட்டிக்கொள்வதற்காக நாடாளுமன்றத்தைக் கலைக்க தாம் தயார் என கூறினரோ, என எண்ணத்தோன்றுகிறது. அப்படியில்லையென்றல் நிபந்தனையற்ற நாடாளுமன்றக் கலைப்புக்கு ஐ. தே. க தயாராகுமா?

### இலங்கை அரசின் ஆட்சேபனை

வட – கிழக்குப் பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு இந்திய அமைதிப்படையினரால் பயிற்சி அளிக்கப்படுவதாக, இலங்கையரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. 'தமிழ் தேசிய ராணுவம்' என்ற பேரில் ஈ.பி.ஆர்.எல் எவ் வுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக இது நடைபெறுவதாக இலங்கை அரசு இந்தியாவிற்குத் தெரிவித்துள்ளது.

### பாதுகாப்பை உறுதிசெய்ய புதிய படை

''இந்தியப் படை இலங்கையை விட்டு வெளியேறுவதன் மூலம் ஏற்படும் இடைவெளிக்கு 10 ஆயிரம் காவற்படையினரையும், 20 ஆயிரம் இராணுவத்தினரையும் புதிதாக நியமனம் செய்ய வேண்டும். இதன் மூலம் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.'' இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள், திருகோணமலையில் இந்தியப் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

### திறப்பு விழா

யாழ். கல்வித் திணைக்களத்தில் தொழில் நுட்ப முறைசாராக் கல்வி வளநிலையம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி அவர்களால்,இம்மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை மு. ப. ஒன்பது மணிக்குத் திறந்து வைக்கப் பட்டது.

### மீண்டும் மதிய உணவு

பாடசாலைப் பிள்ளைகளுக்கான மதிய உணவு வழங்கும் திட்டம் மீண்டும் உடனடியாக நடை முறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான பணிப்புரை கல்விப் பணிப்பாளரினல் கொத்தணி அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் இந்த வாரத்திலிருந்தே வழங்கப்படலாம்.

ஏலவே பாடசாலை அதிபர்களுக்கு மதிய உணவு தொடர்பான வேறெரு சுற்றுநிருபமும் அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிஸ், பிஸ்கட், பாண் போன்ற தின்பண்டங்களுக்குப் பதிலாகச் சோறும் கறியும் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

### ஜனதிபதிக்கு — அனைத்துத் தொழிற்சங்க கூட்டறிக்கை

ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தால், அதன் தேசிய அமைப்பாளரான திரு. வி. ஏ. கந்தசாமி அவர்களால் கையொப்பம் இடப்பட்டு அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டுத் தீர்மானம் ஒன்று ஜனதிபதி பிரேமதாஸ அவர்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இக் கூட்டறிக்கையில் வட—கிழக்கு மாகாண மின்சாரத் துண்டிப்பு, அதனல் இப் பகுதியில் ஏற்பட்டுள்ள வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார வீழ்ச்சி; கண்மூடித்தனமான இந்தியப் பொருட்கள் பகிஷ்கரிப்பால் நேர்ந்துள்ள பாதிப்பு, மலையக மக்கள் ஆயுதபயமுறுத்தலால் வேலை நிறுத்தப்படுதல்,போக்குவரத்துச் சீர்கேடு, விலைவாசி ஏற்றம், தொழிலாளர் நஷ்டஈடு, பென்ஷன் இன்னும் அவசரகால நிலையின் கீழ் பிறப்பிக்கப் பட்டுள்ள தொழிலாளர் விரோத நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினைகள் இதில் அடங்கியுள்ளன.

### ஜனசக்தி முத்திரைகளுக்கு உள்ளூர்ப் பொருட்கள்

ஜனசக்தி அட்டைகள் முதலில் 25 மாவட்டங்களிலுள்ள 28 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விநியோகிக்கப்படுகின்றன. இதில் யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவும் ஒன்ருகும். யாழ். நகரில் சுமார் 6500 குடும்பத்தவர்கள் ஜனசக்தி அட்டைகளைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஜனசக்தி அட்டைகளைப் பெற்றவர்கள், அதிலுள்ள ரூபா 458/— பெறுமதியான அட்டைகளைக் கொடுத்து சேமிப்புக் கணக்கொன்றைத் தபால் கந்தோரில் ஆரம்பிக்க வேண்டுமாம்! இவற்கு வட்டி வேறு.

ரூபா 1000/—பெறுமதியான முத்திரைகள், பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்குச் சில குடும்பங்களுக்குப் போதாமலிருக்கலாம். இவர்கள் இரு வாரங்களுக்கு ஒரு முறை சேமிப்புக் கணக்கிலிருந்து பணத்தை எடுக்கலாம். பணத்தை ரூபா 50 மடங்குகளாகவே எடுக்க வேண்டுமாம். ஜனசக்தி அட்டையிலுள்ள கூப்பன்களைக் கொடுத்து முதல் இரண்டு வாரங்களுக்கு ரூபா 500/ பெறுமதியான பொருட்களையும், அடுத்த இரண்டு வாரங்களுக்கு ரூபா 500/—பெறுமதியான பொருட்களையும் வாங்கலாமாம். கூப்பன்கள் மிஞ்சி இருந்தால் தபால் கந்தோர் சேமிப்புக் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம்.

உள்ளூர் உணவு வகைகளையும் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் மாத்திரம்தான் ஜனசக்திக் கூப்பன் முத்திரைகளுக்கு வாங்க முடியுமாம்.


Y. W. C. A

இளம் பெண்கள் கிறிஸ்தவ சங்கம்

பாடசாலை மாணவியருக்கும், பணியாற்றும் நங்கையருக்கும், பெண் விருந்தினருக்கும் ஏற்ற விடுதி வசதி இல, 41, 4 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

99, சப்பல் வீதி அல்லது
28, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.


### திருமதி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கில் கலாநிதி ராஜினியின் அஞ்சலிக் கூட்டம் பல்கலைக்கழக உபவேந்தர் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பல்கலைக்கழக விரிவுரையாளர், காலஞ்சென்ற ராஜினியின் முயற்சியால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட 'பூரணி இல்லம்' நடாத்தும் பாலர் பாடசாலை ஆசிரியை, ராஜினியின் மருத்துவபீட மாணவியொருவர், இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ராஜினிக்கு கல்வி போதித்த ஆங்கிலேயரான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின், முன்னுள் ஆசிரியர் திரு. பாவிஇன், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், மருத்துவபீட உடற் கூற்றியல் துறையின் தொழில் நுட்பவியலாளர், தேசிய கிறிஸ்தவ -சபையின் பிரதிநிதியான செல்வி றிபேரா ஆகியோர் உரையாற்றினர்கள்.

இப்பல்துறை சார்ந்த பேச்சாளர் பல்வேறு கோணங்களிலிருந்து ராஜினியின் செயற்பாடுகளை நோக்கினர்கள்.

ராஜினி கொலை செய்யப்பட்டமை, குறிப்பாக யாழ். பல்கலைக்கழகத்துக்கும்,பொதுவாகத் தமிழ் பேசும் மக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு என்ற கருத்தே எல்லோர்பேச்சிலும்தொனித்தது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 6-10-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89

படிப்பகம்